பக்கங்கள் - 16
விலை - ரூபா 50




Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 259

புதன்கிழமை
13 ஓகஸ்ட் 2025

ஆடி 28 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

புதன்பொய்கை


## அரசசேவைக்கு புதிதாக 62,000 பேர் இணைப்பு!

### அரசாங்கம் தீர்மானம் ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 13
அரச சேவையில் மேலும் 62ஆயிரம் பேரை இணைத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க

15

## சூறையாடியது போதாதென்று சலுகைகளைப் பெறவும் ஆசை

விரிவு பக்கம்:- 02

### செம்மணிப் புதைகுழி

# எதிர்பார்ப்புக்கு மத்தியில் நாளை மீண்டும் வழக்கு!

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 13

யாழ்ப்பாணம் செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கு நாளை மீண்டும் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. புதைகுழியின் மண் மாதிரிகள் தொடர்பான அறிக்கை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் நீதிமன்றத்தால் கோரப்பட்டிருந்த நிலையில், நாளைய வழக்கு பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

15

### கிளிநொச்சி

## பிரபல மகளிர் பாடசாலையின் அதிபர் நியமனத்தில் முறைகேடு!

### ஆளுநரிடம் முறைப்பாடு

கிளிநொச்சி, ஓக. 13
கிளிநொச்சியில் உள்ள பிரபல மகளிர் பாடசாலையொன்றின் அதிபர் நியமனத்தில் பெரும் முறைகேடு இடம்பெற்றுள்ளது என்று சிவசேனை அமைப்பால் வடக்கு மாகாண ஆளுநரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.
இதுதொடர்பில் சிவசேனை

15

### பிரதி அமைச்சர்

## அருண ஜயசேகரவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை!

கொழும்பு, ஓகஸ்ட் 13
பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை, சபாநாயகரிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டுள்ளது.
15 காரணங்களை முன்னிறுத்தியே, பிரதான எதிர்க்கட்

15

### ஈஸ்டர் தாக்குதல் விசாரணையை

## இருட்டடிப்புச் செய்ய சஜித் தரப்பு முயற்சி!

### அரசாங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓகஸ்ட் 13
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுடன் தொடர்புடைய விசாரணைகளை இருட்டடிப்புச் செய்து, பிரதான சூத்திரதாரியைப் பாதுகாக்கும் தேவைப்பாடு சஜித் அணிக்கும் உள்ளது என்பதையே பாது

15



## ஹர்த்தால் ஒத்திவைப்பு: 18ஆம் திகதியே நடக்கும்!

யாழ்ப்பாணம், ஓக. 13
ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்ட ஹர்த்தால், ஓகஸ்ட் மாதம் 18ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சுமந்திரன் அறிவித்துள்ளார்.
தமிழர்களின் தாயகமான வடக்கு - கிழக்கில் நிலைகொண்டுள்ள அளவுக்கு அதிகமான இராணுவப் பிரசன்னம் குறைக்கப்பட வேண்டும் என்றும், முத்து ஐயன்கட்டுப் பகுதியில் இராணுவத்தினரின் தாக்குதலில்

15

### இ.போ.ச. பஸ் - மோ.சைக்கிள்;

## விபத்தில் பெண் உயிரிழப்பு எழுதுமட்டுவாழில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக. 13
யாழ்ப்பாணம் - தென்மராட்சி எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விபத்தில், குடும்பப் பெண்ணொருவர் உயிரிழந்துள்

15



## தொண்டைமானாறில் சடலமொன்று மீட்பு!

யாழ்ப்பாணம், ஓக. 13
யாழ்ப்பாணம் - தொண்டைமானாறு கடல் நீரேரியிலிருந்து நேற்று மாலை பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

15

### மட்டுவில் பொருளாதார மத்திய நிலையம்

## செப்ரெம்பர் இறுதிக்குள் செயற்பட ஆரம்பிக்கும்!

### வர்த்தக அமைச்சர் உறுதிமொழி

விரிவு பக்கம்:- 15

### முச்சந்தி முரளி

'இதென்ன இசைநிகழ்ச்சியை பின்னுக்குப் போடுறமாதிரி ஹர்த்தாலையும் பின்னுக்கு போடுகினம்?'

## பிரதமர் பதவியில் மாற்றம் இல்லை!

### அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 13
பிரதமர் பதவியில் இருந்து கலாநிதி ஹரிணி அமரசூரிய நீக்கப்பட்டு, புதிய பிரதமராக அமைச்சர் பிமல் ரத்நாயக்க நியமிக்கப்படவுள்

15

### ஊர்காவற்றுறையில்

## நிலத்துக்குக் கீழ் பதுக்கப்பட்ட 40 கிலோகிராம் கஞ்சா மீட்பு!

யாழ்ப்பாணம், ஓக. 13
யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பகுதியில், கிடங்கு வெட்டி நிலத்துக்குக் கீழ் பதுக்கப்பட்டிருந்த 40 கிலோவுக்கும் மேற்பட்ட கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. ஊர்காவற்றுறைக் கடற்கரைப் பகுதியில் பிரமாண்டமான கிடங்கு

15

மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 12.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4161 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 04 10 20 60 |
| விசேட எழுத்து | F |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 12.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1228 |
| வெற்றி இலக்கினம் | தனுசு |
| வெற்றி இலக்கங்கள் | 22 41 58 62 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 12.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0187 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 1 4 3 2 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 12.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2267 |
| ஆங்கில எழுத்து | A |
| சுப்பர் இலக்கம் | 14 |
| வெற்றி இலக்கங்கள் | 22 57 65 66 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 12.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5919 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 9 6 9 9 2 2 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 12.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1949 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 01 13 16 67 |
| விசேட எழுத்து | M |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 12.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0494 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 9 9 2 2 |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 12.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0035 |
| வெற்றி இலக்கினம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 04 21 30 41 |

# சூறையாடியது போதாதென்று சலுகைகளைப் பெறவும் ஆசை!

## சாடுகின்றார் ஹந்துன்நெத்தி

**கொழும்பு, ஓக.13**
**நாட்டின் சொத்துகளைச் சூறையாடி வெளிநாட்டு வங்கிக் கணக்குகளில் நிரப்பியது போதாதென்று உத்தியோகபூர்வ இல்லங்களையும் பாதுகாப்பையும் வைத்துக்கொள்வதற்கு ஆசைப்படுகிறார்கள் முன்னாள் அரசியற் தலைவர்கள் என்று அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
முன்னாள் தலைவர்கள் எத்தனை வீடுகள் வேண்டுமானாலும் வைத்துக்கொள்வதற்கு அவர்களிடம் பணம் உண்டு. எத்தனை தனியார் பாதுகாப்பை நிறுவுவதற்கும் பணம் உண்டு. அவ்வாறு இருந்தும்கூட ,உத்தியோகபூர்வ இல்லங்களையும் பாதுகாப்பையும் வைத்துக் கொள்வதற்கு ஆசைப்படுகிறார்கள். அவர்களிடம் உள்ள பணம் எல்லாம் நியாயமான வழியில் உழைத்தது கிடையாது. மக்களிடம் இருந்து கொள்ளையடித்தது. உண்மையில், சலுகைகள் வழங்குவதாக இருந்தால் எங்களது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களுக்குத்தான் வழங்கவேண்டும். அவர்களுக்கு வாகனங்கள் இல்லை. சிலர் நண்பர்களின் வாகனங்களைப் பாவிக்கிறார்கள். சிலர் வாடகைக்கு எடுத்துப் பாவிக்கிறார்கள். பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுசேர்ந்து ஒரு வாகனத்தில் வருகிறார்கள். நல்ல வருமானம் வரும் உத்தியோகத்தில் இருந்தவர்கள், எல்லாவற்றையும் துறந்துவிட்டு அரசியலுக்கு வந்திருக்கிறார்கள்.
நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சலுகை நீக்கமானது எங்களைத்தான் அதிகம் பாதிக்கும். அப்படி இருந்தும்கூட நாம் மக்களின் நிதியை வீணடிக்கக் கூடாது என்பதற்காக சலுகைகளை நிராகரிக்கிறோம்.
ஆனால் முன்னாள் ஜனாதிபதிகளால், நாடாளுமன்ற உறுப்பினர்களால் இந்த சலுகைகள் இல்லாமல் வாழமுடியாது. இவ்வாறு ஒன்றிணைந்து என்றைக்காவது மக்களின் பிரச்சினைக்காக நீதிமன்றம் சென்றுள்ளார்களா? இல்லை. அவர்களின் சுகபோகத்துக்காகத்தான் செல்கிறார்கள். இதிலிருந்து இவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்தை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும் - என்றார். (எ-75)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 12.08.2025 | செவ்வாய்க்கிழமை | 0627 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| G | 1 2 4 9 8 0 | |

| Super Ball | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 12.08.2025 | செவ்வாய்க்கிழமை | | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| 2893 | Q | 48 50 73 78 | |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 12.08.2025 | செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| C | 12 43 44 67 | 5054 |

| SASIRI | |
|---|---|
| திகதி | தினம் |
| 12.08.2025 | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0746 | 03 24 32 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 12.08.2025 | செவ்வாய்க்கிழமை | |
| கடகம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| ♋ | 07 14 37 39 | 4605 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 12.08.2025 | செவ்வாய்க்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| U | 12 | 06 27 30 33 | 2069 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 12.08.2025 | செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Y | 44 56 59 63 | 2719 |

## அத்துரலிய ரத்தன தேரரை தேடும் முயற்சிகள் தீவிரம்

கொழும்பு, ஓக.13
தலைமறைவாகியுள்ள நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரரை கைதுசெய்வதற்குரிய தேடுதல் வேட்டை தீவிரமாக நடைபெறுகின்றது என்றும், அவர் வெளிநாட்டுக்குத் தப்பியோடுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
2020ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் போட்டியிட்ட அபே ஜனபல கட்சிக்குத் தேசியப்பட்டியல் ஆசனமொன்று கிடைத்தது. அந்தக் கட்சியின் பொதுச்செயலாளரான வேதினிகம விமலதிஸ்ஸ தேரரைக்கடத்தி, பலவந்தமாகக் கையொப்பம் பெற்று, தேசியப் பட்டியல் வாய்ப்பை அத்துரலிய ரத்தன தேரர் பெற்றுக்கொண்டார் எனக் குற்றஞ்சாட்டப்படுகின்றது. இது தொடர்பாக வேதினிகம விமலதிஸ்ஸ தேரரால் முறைப்பாடும் முன்வைக்கப்பட்டது. இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துவந்த கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினர், ரத்தன தேரரைக் கைதுசெய்வதற்கு முற்பட்டனர்.
அவர் தங்கி இருந்த விகாரைக்குச் சென்றவேளை அவர் தலைமறைவானார். அதன்பின்னர் ஏனைய பல இடங்களிலும் சோதனை நடத்தப்பட்டது. அவர் அங்கும் இருக்கவில்லை. இந்தநிலையில் அவரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-இ)

## அரசாங்கத்துக்குள் பிளவு எதுவுமில்லை

### அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஓக.13
அரசாங்கத்துக்குள் எவ்வித பிளவும் இல்லை. ஆட்சியமைப்பது குறித்து நாமலும், சஜித்தும் பகல் கனவு காண்கின்றனர் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.
இதன்போது சுப்ரிம் செட் ரொக்கெட் விவகாரத்தால் அரசாங்கத்துக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாகவும், தேசிய மக்கள் சக்தியின் அணியுடன் இணைந்து சஜித் பிரேமதாஸ முற்போக்கான அரசாங்கமொன்றை ஸ்தாபிக்கவுள்ளார் எனவும் வெளியாகியுள்ள தகவல்கள் தொடர்பில் கேள்விகள் எழுப்பட்டன.
அவற்றுக்கு பதிலளித்த அமைச்சர்,
எதிரணிகளுக்கு அரசியல் செய்வதற்கு ஒன்றுமில்லை என்பதாலேயே வாராந்தம் கட்டுக்கதைகள் உருவாக்கப்பட்டுவருகின்றன. அரசாங்கத்துக்குள் எவ்வித பிளவும் இல்லை. எமது அணியில் ஒரு பிரிவை எடுத்து சஜித் ஆட்சி அமைப்பார் எனக் கூறப்படுவது பகல் கனவாகும் - என்றார். (ச-44)

## முத்துஐயன்கட்டு விவகாரத்தில் இராணுவத்தைக் காக்க முயற்சி

### சாணக்கியன் எம்.பி. குற்றச்சாட்டு




கொழும்பு, ஓக.13
முத்துஐயன்கட்டு இளைஞர் கொலை விவகாரத்தில் இராணுவத்தினரைப் பாதுகாக்கும் நிலைப்பாட்டில் அரசாங்கம் செயற்படுகிறது. இவ்வாறான சம்பவங்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இனியொருபோதும் இடம்பெறாத வகையில் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்துள்ளார்.
முல்லைத்தீவுப் பகுதியில் தமிழ் இளைஞர் இவ்வாறு கொலை செய்யப்பட்டதை அலட்சியப்படுத்தும் அரசாங்கம் அம்பாந்தோட்டைப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருந்தால் அரசாங்கம் எவ்வாறான வகையில் செயற்பட்டிருக்கும். இதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தவேண்டும்.
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் சகல தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்று வலியுறுத்துகிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)


## தங்கத்துடன் ஒருவர் கைது

கொழும்பு, ஓக.13
115 மில்லியன் ரூபாவுக்கும் மேல் மதிப்புள்ள தங்க பிஸ்கட்டுகளுடன் நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில், குற்றப் புலனாய்வுத்திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து சுமார் 3 கிலோ 266 கிராம் எடையுள்ள 28 தங்க பிஸ்கட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகவாகனத்தில் எழுந்தருளிய நல்லூர்க் கந்தன்





வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய விசுவாவசு வருட பெருந்திருவிழாவின் 14 ஆம் நாள் மாலை உற்சவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. இதன்போது நல்லூர்க் கந்தவேற்பெருமான் மஞ்சள் வண்ணமலர் மாலைகள், இலாமிச்சை வேர்களிலான மண்ணிற மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு ஐந்துதலை நாகவாகனத்தில் உள்வீதி, வெளிவீதி உலா வந்து அருள்பாலித்தார். கூடவே வள்ளி தெய்வயானையரும் ஐந்துதலை நாக வாகனங்களில் எழுந்தருளினர். (ச-66)

## பஜனை நிகழ்வும் திருப்புகழ் கச்சேரியும்

யாழ்ப்பாணம், ஓக.13

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நடத்தும் 'தெய்வீகக் கலை அர்ச்சனை' நிகழ்வு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அராலி கிழக்கு மலையாளங்காட்டு ஜயனார் பஜனைக்குழுவினரின் பஜனை நிகழ்வும், நீர்வேலி புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களின் நந்தனார் இசை நாடகமும், திருமதி சுபாசினி பிரணவன், தேஜஸ்வினி பிரணவன் ஆகியோரின் திருப்புகழ் கச்சேரியும் இடம்பெறவுள்ளன. நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (ச-41)

## தெய்வீகத் திருக்கூட்டத் தொடர்


யாழ்ப்பாணம், ஓக.13

நல்லூர்ப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடரின் பதினாறாம் நாள் நிகழ்வு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இன்று புதன்கிழமை மாலை 4மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

வேதாந்த மடம், ஸ்ரீ சிவகுருநாதபீட 8ஆவது குருபீடாதிபதி வணக்கத்திற்குரிய ஸ்ரீ வேதவித்தியாசாகரர் சுவாமிகள் முன்னிலை வகிக்க, சுன்னாகம் ஸ்ரீ சொர்ணவரத பத்திரகாளி அம்மன் தேவஸ்தானப் பிரதமகுருவும் மல்லாகம் மகாவித்தியாலய ஆசிரியருமான சிவஸ்ரீ நாகேஸ்வரக்குருக்கள் சிவ சுந்தரக் குருக்கள் தலைமையில் இத்திருக்கூட்ட நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம அதிதியாக சங்கானைப் பிரதேச செயலாளர் திருமதி கவிதா உதயகுமார், சிறப்பதிதியாக சங்கானைப் பிரதேச செயலகக் கணக்காளர் திருலோகசிங்கம் திருவருட்செல்வன், கௌரவ அதிதிகளாக வட்டு. இந்துக் கல்லூரி ஆசிரியரும் பண்ணாகம் ஸ்ரீ விசுவத்தானை முருகன் ஆலய அறநெறிப்பாடசாலைப் பொறுப்பாசிரியருமான அரிச்சந்திரன் முருகதாசன், சுழிபுரம் ஓய்வுநிலை ஆசிரியர் கலாபூஷணம் ஆறுமுகம் கனகரத்தினம், சங்கானை தெற்கு கிராம அலுவலர் கலாவித்தகர் துரைசிங்கம் சுபேஷ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கலைநிகழ்வுகளை சங்கானை தெற்கு மாவடி ஞானவைரவர் ஆலய அறநெறிப்பாடசாலை மாணவர்கள் வழங்கவுள்ளனர். சிறப்பு நிகழ்வுகளாக பரதஷேத்ரா நர்த்தனாலய மாணவர்களின் கலைநிகழ்வும், யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவர்களின் இசைநடன அர்ப்பண நிகழ்வும், மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ச-41)





## ஆன்மிக நூலகம் அங்குரார்ப்பணம்!

யாழ்ப்பாணம், ஓக.13

மாணவர்களை ஆன்மிக நெறியில் வழிப்படுத்தும் நோக்கில் புத்தூர் மணற்பகுதி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் ஆன்மிக நூலகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இவ்வாலயத்தில் அறநெறிவகுப்புகள் இடம்பெற்றுவரும் நிலையில் அதன் அடுத்த கட்டத்தின் ஓர் அங்கமாக இந்த நூலக அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது.

ஆலயப் பரிபாலனசபைத் தலைவர் அ.பரஞ்சோதி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் கலந்துகொண்டு நூலகத்தினைத் திறந்து வைத்தார். (ச-41-27)

# 16 ஆம் திருவிழா




## வருவாய் முருகா

தேவர்க்குத் துயர்தந்த
சூரனைச் சங்கரிக்கத்
தேவசேனை அதிபதியாய்
வேலெடுத்துப் போர்செய்து
களம் கண்ட வீரத்திருமகனே!
எமைக் காப்பதற்கு
உளம்கொண்டு வருவாயே
உமையவள் பாலனே!

நாயன்மார்கட்டு
ப.மகேந்திரதாசன்

**பல்லவி**

நாதமணி ஓசையெழ நாள் விடியும் நல்லை
நாயகனின் பாதந்தொழ ஊழ் விலகும்
வேதமொழி யாலவனை வேண்டித்தொழ எம்மை
வேரறுக்கும் வினையகலும் பீடழியும்

**அனுபல்லவி**

நாலுதிசை ஊரிருந்தும் கூடிடுவோம்
நல்லைநகர் கந்தனவன் தாள் பணிவோம்
தோள்நிமிர்த்தி காவடிகள் ஆடிடுவோம்
தொல்லைவினை தீர்த்திடவே வேண்டிடுவோம்

**சரணம்**

வள்ளிதெய்வயானையுடன் நடுவமர்ந்து
வள்ளலெனப் பேரருளை ஈந்தருள்வான்
தெள்ளுதமிழ் மன்னனவன் யாழரசின்
தெய்வமென என்றும் நிலை நின்றருள்வான்
(நாலுதிசை)
(நாதமணி)

நல்லூரின் மண்மீது நாம் நடந்தால்
நம்துயரம் துன்பமெல்லாம் ஓடிவிடும்
பொல்லாத மும்மலங்கள் போயகலும்
பொற்புமிகு வாழ்வு நமைத் தேடிவரும்
(நாலுதிசை)
(நாதமணி)

கோடியழ குள்ளதவன் திருமேனி
கோலமயில் வாகனத்தில் எழில்கூடி
நாடிவரும் பக்தர்க்கருள் புரிதேவன்
நல்லைநகர் நாதனெம்முள் உறைவோனே!
(நாலுதிசை)
(நாதமணி)

இயல்வாணன்

அஞ்சியே வந்து ஐயா
வாசலில் அழுகின்றோம் துஞ்சியே இருக்கும்
எம் இன மக்களை
காக்கவே வஞ்சியர்
இருவர் துணையோடு வேல்கொண்டு வீதி
வாருமைய்யா

கவிக்கிறுக்கன் , இணுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய
(ராசிபலன்)

**மேடம்:** கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவுசெய்யநேரும். வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், வெளியில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**மிதுனம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள்.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும்.

**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. இன்று குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். சிலருக்கு குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று வழிபடும் வாய்ப்பு ஏற்படும்.

**துலாம்:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத் துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்தநாள்.

**தனுசு:** மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதாக இருந்தால் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.

**மகரம்:** புதிய முயற்சிகளையும் பயணங்களையும் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறிய அளவில் உடல் நலம் பாதிக்கப்பட்டாலும், எளிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும்.

**கும்பம்:** மகிழ்ச்சிதரும் நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் இருந்து நல்ல செய்தி கிடைக்கக்கூடும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாகமுடியும். உறவினர்கள்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

# யாழ்ப்பாணம் மாநகர சபை

**இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், பல்பொருள் வாணியக்கடைகள், சந்தை, சிற்றுண்டிச் சாலைகள், வாகனத்தரிப்பிடக் குத்தகை, மலசல கூட சுத்திகரிப்புபணி, நடமாடும் கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி , கேள்வி அறிவித்தல் - 2025 (01.09.2025 - 31.12.2025)**

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி நிலையங்கள் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட மீள் கேள்வி யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா 1,180.00 (வற் வரியுடன்)

கேள்விப் படிவம் விநியோகித்தல் - 13.08.2025 - 25.08.2025 (மு.ப 9.00 - பி.ப.2.30.00 மணி வரை)

கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 26.08.2025 மு.ப 10.00 மணி வரை

கேள்வி திறத்தல் - 26.08.2025 .மு.ப 10.00 மணிக்கு

1. விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின நிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 26.08.2025 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும்.
2. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.
3. கடந்த காலங்களில் தவறுநர் எனக்கணிக்கப்பட்டுள்ளோர் அல்லது இச்சபைக்கு குத்தகையாக, வாடகை, வரியாக நிலுவையுள்ளோர் கேள்வி சமர்ப்பிக்க தகுதிஅற்றவர் ஆவார் . அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது குற்றமாகும். அவ்வாறு இடம்பெறும் பட்சத்தில் அத்தகைய கேள்வி நிராகரிக்கப்பட்டு அவர்களால் செலுத்திய வைப்புப் பணங்கள் மீளளிக்கப்படமாட்டாது.
4. கேள்வி விண்ணப்பம் பெறுபவர் தேசிய அடையாள அட்டைப்பிரதி மற்றும் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவை உத்தியோகத்தரது கடிதம் என்பன சமர்ப்பிக்க வேண்டும்.
5. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கும் நிராகரிப்பதற்கும் கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
6. குத்தகை தொடர்பான ஏனைய நிபந்தனைகளை நானாவித இறைவரிப்பகுதியின் விளம்பரப்பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. நிபந்தனையின் பிரதி தேவைப்படின் அலுவலகநேரத்தில் மாநகரசபை வளாகத்தில் உள்ள நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்ள முடியும்.
7. கேள்வியில் சித்திபெற்றவர் குத்தகையின் 1/3 வைப்புப்பணத்தை 29.08.2025 ம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும்..

| இல | முகவரி | கடை இல | பிணைப் பணம் | 01.09.2025 - 31.12.2025 வரையான காலப்பகுதிக்கான குத்தகைக்கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை கருவாட்டுக்கடை | இல 02 | 5,000.00 | 19,366.67 |
| 2 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 428,333.33 |
| 3 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 533,900.00 |
| 4 | செங்குந்தா கருவாட்டுக்கடை | இல.01 | 5,000.00 | 47,000.00 |
| 5 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 220,000.00 |
| 6 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 333,716.67 |
| 7 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 235,295.67 |
| 8 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 593,750.00 |
| 9 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 188,416.67 |
| 10 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 87,115.00 |
| 11 | நாவாந்துறை கோழிக்கடை | இல.10 | 5,000.00 | 210,000.00 |
| 12 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.05 | 5,000.00 | 69,321.69 |
| 13 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.07 | 5,000.00 | 48,741.81 |
| 14 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.08 | 5,000.00 | 43,358.55 |
| 15 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.09 | 5,000.00 | 48,156.92 |
| 16 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 174,333.33 |
| 17 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7,000.00 | 165,433.33 |
| 18 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 145,000.00 |
| 19 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 183,334.00 |
| 20 | குருநகர் கோழி இறைச்சிக்கடை | | 5,000.00 | 333,666.67 |
| 21 | புங்கன்குளம் உள்ளூர் உற்பத்தியாளர் அறிமுகச் சந்தை | | **2,000.00** | 2,188.19 |
| 22 | யாழ் பொதுநூலக சிற்றுண்டிச்சாலை | | 5,000.00 | 123,666.33 |
| 23 | துரையப்பா விளையாட்டு அரங்கு சிற்றுண்டிச்சாலை | | 1,000.00 | 38,333.33 |
| 24 | வாகனத்தரிப்பிடக் குத்தகை | | 40,000.00 | 1,203,033.33 |
| 25 | நடமாடும் கடை நெடுந்தூர பஸ் நிலையம் பயணிகள் பேருந்து நிலையம் | இல 01 | 20,000.00 | 70,833.33 |
| 26 | நடமாடும் கடை பண்ணை மீன்சந்தை | இல 01 | 20,000.00 | 72,000.00 |
| 27 | நவீனசந்தையில் அமைந்துள்ள மலசல கூடத் தொகுதி சுத்திகரித்து பராமரிக்கும் சேவை | | 1,000.00 | 8,166.67 |
| 28 | நல்லூர் சந்தைப்பகுதியில் அமைந்துள்ள மலசல கூடத் தொகுதி சுத்திகரித்து பராமரிக்கும் சேவை | | 1,000.00 | 4,666.67 |

## கேள்வி அறிவித்தல் - 2025 (22.09.2025 - 31.12.2025)
## பண்ணை கடற்கரைப்பூங்கா சிற்றுண்டிச்சாலை

| இல | முகவரி | பிணைப் பணம் | 22.09.2025 - 31.12.2025 வரையான காலப்பகுதிக்கான குத்தகைக்கட்டணம் |
|---|---|---|---|
| 1 | பண்ணை கடற்கரைப் பூங்கா சிற்றுண்டிச்சாலை | 20,000.00 | 207,313.67 |

முதல்வர்,
யாழ் மாநகர சபை

(CR/45796) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித யாத்திரையாக சபரிமலை யாத்திரை

## பிரகடனப்படுத்த அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஓக.13

**சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கான யாத்திரையைப் புனித யாத்திரையாகப் பிரகடனப்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே அமைச்சரவை முடிவுகளை அறிவித்த அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, இலங்கையின் இந்து பக்தர்கள் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் முதலாம் ஆம் திகதி தொடக்கம் அடுத்த வருடத்தின் ஜனவரி மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இந்தியா, கேரளாவில் அமைந்துள்ள சபரிமலை ஐயப்பன் ஆலயத்துக்குச் சென்று தரிசிக்கின்றனர்.

தற்போது ஆண்டுதோறும் 15 ஆயிரத்துக்கு அதிகமான இலங்கையின் இந்து பக்தர்கள் கலந்துகொள்கின்ற தல யாத்திரை மையமாகவும் அமைந்துள்ளது. அதற்கமைய, சபரிமலை ஐயப்பன் ஆலயத்துக்கு இலங்கை இந்து யாத்திரிகர்களால் மேற்கொள்ளப்படுகின்ற வழிபாட்டுதரிசிப்பானது, இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட புனித தலயாத்திரையாகப் பிரகடனப்படுத்துவதற்கு புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்று குறிப்பிட்டார். (ச-44)



## எரிபொருளுக்கான வரி நீக்க வாய்ப்பில்லை

கொழும்பு, ஓக.13

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பெற்ற கடன்கள் முழுமையாகத் திருப்பிச்செலுத்தப்படும் வரை எரிபொருள்களின்மீது விதிக்கப்பட்டுள்ள வரிகளை நீக்க வாய்ப்பில்லை என வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

இந்த வரிகளை நீக்கினால் கடன்களைத் திருப்பிச் செலுத்தமுடியாத நிலை ஏற்படும். கடன் முழுமையாகத் திருப்பிச்செலுத்தப்படும் வரை, பெற்றோலுக்கு விதிக்கப்பட்டுள்ள வரியைக் குறைக்கமுடியாது என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

## பஸ்- டிப்பர் விபத்து; 28 பேர் படுகாயம்

கொழும்பு, ஓக.13

மாதுருஓயாவிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து ஒன்றும் டிப்பர் வாகனமொன்றும் ஹபரணயில் மோதி விபத்துக்குள்ளானதில் 28 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று அதிகாலையில் நடந்துள்ளது.

பேருந்தும் டிப்பரும் நேருக்குநேர் மோதியதில் இந்த விபத்துச் சம்பவித்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த 28 பேர் பொலநறுவை, மின்னேரிய, ஹிங்குராங்கொட ஆகிய மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)

## யாழ்.கூட்டுறவுச் சங்கத்தினர் தென்பகுதியில் கள ஆய்வு

யாழ்ப்பாணம், ஓக.13

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சங்கத்தினர், தென்பகுதியிலுள்ள சங்கங்களுக்குச் சென்று கள ஆய்வில் ஈடுபட்டனர்.

இந்தக் களவிஜயம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமையும் நேற்று செவ்வாய்க்கிழமையும் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் கிராமிய வங்கிகள், கோப்சிற்றிகள், கிளை விற்பனை நிலையங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் அதனை வலுப்படுத்தும் நோக்கில் இந்தக் களவிஜயம் அமைந்தது.

இதன்போது தெற்கேயுள்ள கூட்டுறவுச்சங்கங்களுக்கு இந்தக் குழுவினர் சென்று அங்குள்ள கூட்டுறவு அமைப்புகளின் செயற்பாடுகள் குறித்து ஆராய்ந்தனர். (ச-25,9)




## ரயில்வே முகாமையாளரை நீக்குவதற்கு அனுமதி

கொழும்பு, ஓக.13

ரயில்வே பொதுமுகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தரவை அந்தப் பதவியில் இருந்து நீக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

அவரைக் குறித்த பதவியில் இருந்து நீக்குவதற்கான விசேட முன்மொழிவைப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)




## கடவுளின்ர பேரால.....!

எளியவைக்குத்தான் சட்டம், சம்பிரதாயம் எல்லாம். வலியவைக்கு அதெல்லாம் காலுக்குக் கீழதான். இப்ப பள்ளிக்கூடங்களில இப்பிடியான அரசியல்தான் நடக்குது. பிள்ளையளுக்கு படிப்பை மட்டுமில்லாமல், வாழ்க்கைக்குத் தேவையான எல்லா விசயங்களையும் சொல்லிக்குடுத்து, அவையளை நல்லவழியில, நேர்மையா, சட்டதிட்டங்களை மதிச்சு வாழ்றதுக்கு வழிகாட்டவேண்டியது பள்ளிக்கூடங்களின்ர பொறுப்பு. ஆனால் பள்ளிக்கூடங்களிலயே குத்துவெட்டு, குழிபறிப்பு, குறுக்கால வந்து பதவியில இருக்கிறது எண்டு அங்கையும் ஒருவித அரசியல் வேலைதான் நடக்குது. அதுகளைப் பார்த்துப் பிள்ளையளும் நாளைக்கு இப்பிடியான குள்ளநரி வேலையளைச் செய்யக்கூடும்.

கிளிநொச்சியில் இருக்கிற, பொம்பிளைப் பிள்ளையள் மட்டும் படிக்கிற பெரிய பள்ளிக்கூடமொண்டில இன்னமும் மத அரசியல் பெரும் விளையாட்டுக் காட்டுது. அந்தப் பள்ளிக்கூடத்துக்கு இவ்வளவுகாலமும் பிரின்சிப்பலா இருந்தவா பென்சனில போனதால, புதிசா ஒரு பிரின்சிப்பலைப் போடுறதுக்கு விண்ணப்பம் கோரினவை. அதுக்கு 7 பேர் அப்ளிக்கேசனும் போட்டவை. அந்தப் பள்ளிக்கூடம் 'வன் ஏபி' தரத்தில இருக்கிறதால முதலாம் தரத்தில (கிரேட் வன்னில) இருக்கிற பிரின்சிப்பல்மார்தான் அப்ளிக்கேசன் போடலாம். இந்த ஏழுபேரில ரண்டுபேர் தான் 'கிரேட் வன்னில' இருக்கிற பிரின்சிப்பல்மார். மிச்ச ஆக்கள் கிரேட்-2 காரர். சில வேளை, கிரேட் வன்காரர் ஏதும் காரணங்களால தட்டுப்பட்டால் கிரேட்-2 காரருக்கு அந்தப் பதவியைக் குடுப்பினம். அதாலதான் தாங்கள் கிரேட் வன்னில இல்லாட்டியும் அப்ளிகேசனைப் போட்டுவைப்பம் எண்டு கிரேட்-2 காரரும் விண்ணப்பிச்சவை. அதால எப்பிடியும், தங்களில ஒராளுக்குத்தான் அந்தப் பள்ளிக்கூடத்துக்கு பிரின்சிப்பலா நியமனம் கிடைக்கும் எண்டு அந்த ஏழுபேரும் நம்பிக்கொண்டிருந்தவை. ஆனால் இன்ரர்வியூவில அந்த நம்பிக்கை அப்பிடியே இடிஞ்சு கொட்டுண்டு போட்டுது.

ஏனெண்டால், அந்தப் பள்ளிக்கூடத்து அதிபர் பதவிக்கு விண்ணப்பம் போடாத ஒரு அருட்சகோதரியையும் (வேற பள்ளிக்கூடமொண்டில பிரின்சிப்பலா இருக்கிறா) இன்ரர்வியூவுக்கு கடிதம் போட்டுக் கூப்பிட்டிருக்கினம். ஆனால் அவா கிரேட் -3 இல இருக்கிற பிரின்சிப்பல். அதால அவாக்கு எப்பிடியும் அந்தப் பள்ளிக்கூட அதிபர் பதவி கிடைக்காது எண்டு எல்லாரும் நினைச்சினம். ஆனால் இன்ரர்வியூவில அவாவுக்குத்தான் கூட மார்க்ஸ் எண்டு சொல்லி, அப்ளிக்கேசனே போடாத அருட்சகோதரிக்கே அதிபர் பதவியை, சட்டத்தை வளைச்சுக்கொண்டு குடுத்திட்டினம். முறைப்படி அப்ளிக்கேசன் போட்டு அந்த இன்ரர்வியூவுக்குப் போன ஏழுபேரும் சைவக்காரர். அருட்சகோதரி மட்டும் வேதம். "அந்தப் பள்ளிக்கூடத்தின்ர பேரில வேதக்கடவுளின்ர பேர் இருக்கிறதால, அதுக்கு ஒரு வேதக்காரரைத்தான் அதிபராப் போடோனும் எண்டது எழுதப்படாத சட்டமாம். அதாலதான் அப்ளிக்கேசன் போடாத அருட்சகோதரியை அதிபராக்கினவை" எண்டு கதைக்கினம். இப்பிடி மதத்தை வைச்சுத்தான் அதிபரை செலக்ட் செய்யிறதெண்டால் எதுக்கு வேலமினக்கெட்டு விண்ணப்பம்கோரி, அதுக்கு ஏழுபேரை அப்ளிக்கேசன் போட வைச்சு, இன்ரர்வியூ நடத்தி நேரத்தையும் காசையும் வீணடிச்சவை? பேசாமல் அருட்சகோதரிக்கு மட்டும் அறிவிச்சுப்போட்டு விட்டிருக்கலாமே. இப்பிடி வேற ஏதும் பள்ளிக்கூடத்தில சட்டத்துக்கு மாறா, அப்ளிக்கேசனே போடாத ஆளுக்கு அதிபர் பதவியை டிப்பார்ட்மென்ட்காரர் குடுத்திருப்பினமோ? பள்ளிக்கூடப் பேரில வேதக்கடவுளின்ர பேர் இருந்தாலும் அங்க படிக்கிற பிள்ளையளில முக்கால் வாசிக்கும் மேல சைவப்பிள்ளையள்தானாம். அதால மதத்தை வைச்சு அதிபரைத் தெரிவுசெய்யிறதும் பிழையெல்லோ. அப்பிடியெண்டால் சைவப் பள்ளிக்கூடங்களுக்கெல்லாம் ஐயர்மாரையெல்லோ பிரின்சிப்பலாப் போடோனும் கண்டியளோ.

padsi@uthayan.com
-பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸார் கடமைகளை சரிவரச் செய்யவேண்டும்

## ஆனந்த விஜேபால தெரிவிப்பு

கொழும்பு, ஓக.13

பொலிஸார் கடமைகளைச் சரியாகச் செய்யத் தவறினால் சமூகத்தில் கடுமையான விமர்சனங்கள் எழக்கூடும் எனப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

திட்டமிட்ட குற்றச்செயல்கள் மற்றும் ஏனைய குற்றச் செயல்கள் மூலம் மனித உயிர்கள் காவுகொள்ளப்படுவதுடன் சொத்துகளும் அழிக்கப்படுகின்றன.

நீதியை நிலைநாட்டுவதற்குக் காலம் தாழ்த்தப்படக்கூடாது. அவ்வாறு உரிய நேரத்தில் நீதி நிலைநாட்டப்படாவிட்டால் பெரும் சோகங்கள் நிகழக்கூடும். குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தி மக்கள் மகிழ்ச்சியாக வாழக்கூடிய சூழ் நிலையை உருவாக்குவதே அரசாங்கத்தின் கடமை- என்றார். (ச-இ)

## கல்லீரல் தேவை

**உடனடி - கல்லீரல் தானதாரர்கள் தேவை - உயிர் காக்கும் உதவி**

எங்கள் குடும்பத்தில் ஒருவருக்கு அவசரமாக கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை (Liver Transplant) தேவை.

உங்கள் தன்னார்வ தானம் அவருக்கு புதிய வாழ்க்கையைத் தரலாம்.

**தகுதிகள் :**
(சம்பந்தப்பட்டவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்)

**வயது: 20 - 50 வயது.**
**எடை: 50 - 70 கிலோ.**
**இரத்த வகை: O (ஓ) மட்டுமே.**
**மதுபானம் உபயோகிப்பவர்கள் அல்லாதவர்கள் (no alcohol).**


முக்கியக் குறிப்பு:
தானதாரராகத் தேர்ந்தெடுக்கப்படுவது முழுமையான மருத்துவ, மனோதத்துவ மற்றும் ஆய்வு பரிசோதனைகளுக்குப்பிறகு மட்டுமே.

தானதாரர்கள் (Donors) 03 முதல் 06 வாரங்களில் முழுமையாக குணமடைவார்கள்.

**தொடர்புகளுக்கு:**
**தொலைபேசி: 0703011765**

உதவி தர விரும்புமா? தயவு செய்து உடனே தொடர்பு கொள்ளுங்கள் - உங்கள் ஒரே முடிவு ஒருவரின் வாழ்க்கையை மறு வழங்கும்.

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 27 . 04 . 1982 | 12 . 08 . 2025 |

**சிவகுமாரன் ஓம்பிரகாஷ்**

யாழ் கலட்டி அமமன் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுமாரன் ஓம்பிரகாஷ் அவர்கள் நேற்று (12.08.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுமாரன் மற்றும் சகுந்தலாதேவி தம்பதியரின் பாசமிகு மகனும் லகுசியாமா, ஜனனி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவரூபன், கமலதாசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவாஜனா, அக்ஷய், அக்சரா, அக்ஷித் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் இராசலக்சுமி காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், சந்தானலக்சுமி ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (14.08.2025) வியாழக்கிழமை முற்பகல் 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**இல 30, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 8293**
**077 217 2303**

**NIVISHANTH FURNITURE & ELECTRONICS**

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு விசேட விலைக்கழிவு




No.140, Navalar Road, Jaffna 077 9175 358

**SALE**
மாபெரும் மலிவு விற்பனை

**RS.500/-**
UPWARDS
Menswear | Womenswear | Childrenswear

SHIRT, TROUSER
T SHIRT, DENIM

வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்

ஆகஸ்ட் 14ம் திகதி முதல் 16ம் திகதி வரை

SINCE 1949
Hameedia
Real men wear real clothes

0774766296 / 0773579453



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




நாளொரு நல்வார்த்தை

மகிழ்ச்சியானது ஒரு தனிமையான உந்துவிசையினைப் போன்றது.

– வில்லியம் பட்லர் –


## இராவணனின் விமானங்களும் வீழ்ச்சியடையும் இலங்கையும்

இராமாயணத்திலே சீதையை இராவணன் புஷ்பக விமானத்திலே கடத்திச்சென்றான் என்று சொல்லப்படுகின்றது. இராமாயணம் என்ற இதிகாசம் வால்மீகி, கம்பர் போன்ற புலவர்களின் சிந்தனையிலும் கற்பனையிலும் உருவான காவியம். அப்படிப்பட்ட கற்பனைக் காவியத்தில் சொல்லப்பட்ட இராவணனின் விமானங்களைத் தேடும் ஆராய்ச்சிகளுக்காக இலங்கை விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் ஆராய்ச்சிப் பிரிவு மீண்டும் கோடிகளைச் செலவழிக்கத்திட்டமிட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. நாடு இப்போதிருக்கும் நிலையில், 19 இடங்களில் இராவணனின் விமானங்கள் மறைக்கப்பட்டுள்ளன என்ற அறிவியல் ஆதாரமற்ற கற்பனைக்காக செலவிடப்படும் பணம் வீணடிக்கப்படும் என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் இருக்கப்போவதில்லை.

வரலாறு மற்றும் தொல்லியல் ஆராய்ச்சி முக்கியமானது என்பதில் ஐயமில்லை. ஆனால், அது ஒரு நாட்டின் அவசரத் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கக்கூடியதாக இருக்கவேண்டும். இலங்கையில் உள்ளூர் மற்றும் இந்திய ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்ட இந்தத் திட்டம், 2020ஆம் ஆண்டு நிதிப்பற்றாக்குறையால் நிறுத்தப்பட்டது.

இப்போது மீண்டும் இதைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதானது, பொருளாதார ரீதியாக புத்திசாலித்தனமான முடிவாக ஒருபோதும் இருக்காது. இலங்கை தற்போது வரலாற்றில் கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்தித்திருக்கின்றது. மக்கள் அன்றாட வாழ்வாதாரத்துக்காகப் போராடும் இந்தக் காலகட்டத்தில் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் நடவடிக்கைகள் மிகுந்த கவனத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம். ஆனால், இராவணனின் விமானங்களைக் கண்டுபிடிக்க முற்படுதல் போன்ற தேவையற்ற ஆராய்ச்சித் திட்டங்களில் முனைப்புக் காட்டுவது, நாட்டின் வறுமை நிலையை மேலும் ஆழப்படுத்தும் ஒரு செயலாகவே முடியும்.

நாட்டின் அரச நிதி, கல்வி, சுகாதாரம், உணவுப்பாதுகாப்பு, வேலைவாய்ப்பு உருவாக்கம் போன்ற மக்கள் நலத்திட்டங்களுக்கு ஒதுக்கப்படவேண்டும். ஆனால், வரலாற்று உண்மை உறுதியாக நிரூபிக்கமுடியாத ஒரு புராணக் கதையை அடிப்படையாகக்கொண்ட விமானத் தேடலுக்கு அரசநிதியைச் செலவிடுவது, மக்களின் வரிப்பணத்தை வீணாக்குவதாகவே இருக்கும். இன்றைய சூழலில், இலங்கை அரசாங்கம் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், நாட்டின் பொருளாதார மீட்சியை முதன்மைப்படுத்தவேண்டும். வேலைவாய்ப்பு, உற்பத்தி, முதலீடு, தொழில்நுட்ப மேம்பாடு ஆகிய துறைகளில் முதலீடு செய்வதே நாட்டை முன்னேற்றும் பாதையாகும். நாட்டின் பொருளாதாரம் தரையில் வீழ்ந்து கிடக்கும்போதும், இவ்வாறான திட்டங்கள் தொடர்பான அதிகாரிகளின் அறிவிப்புகள் மக்களின் பொறுமையையும் நம்பிக்கையையும் சிதைப்பவையாகவும், அரசாங்கத்தின் முன்னுரிமைகள் தொடர்பான தவறான புரிதலை ஏற்படுத்துபவையாகவும் அமையும். மக்களின் வரிப்பணத்தை வானத்தில் பறக்கவிடாமல், தரையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க அரசாங்கம் முயலவேண்டும். அதைவிடுத்து அரசியல் கவர்ச்சிக்காக இவ்வாறான புராண ஆராய்ச்சியில் ஈடுபட்டால், இராவணனின் விமானம் பறந்ததா என்பது தெரியா விட்டாலும், இலங்கைப் பொருளாதாரம் தரையில் விழும் என்பது நிச்சயம்.



## இராவணனின் விமானத்தை தேடத் திட்டமிடும் இலங்கை



**கொழும்பு, ஓக.13**

**இராவணனால் 25 இடங்களில் மறைத்துவைக்கப்பட்டுள்ளது என்று கூறப்படும் 19 விமானங்களை மீட்க சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் ஆராய்ச்சிப் பிரிவு தயாராகிவருகின்றது.**

இந்த விமானங்கள் இராவணனால் தயாரிக்கப்பட்டதாகவும், அவை பாதரசம் மற்றும் வேறு இரசாயனங்களைப் பயன்படுத்திப் பறந்தன என்று கதைகள் கூறுகின்றன.

குருநாகல், வாரியப்பொல, சிகிரியா, தம்புள்ள, மஹியங்கனை, பதுளை, அம்பாந்தோட்டை உள்ளடங்கலாக குகைகளிலும் மலைப்பாங்கான பகுதிகளில் நிலக்கீழும் விமானங்கள் ஒளிக்கப்பட்டுள்ளதாக கண்டுபிடிப்புகள் குறிப்பிடுகின்றன என்றும் கூறப்படு கின்றது.

இராவணனின் விமானங்களைத் தேடும் திட்டம் 2020 ஆம்ஆண்டுஆரம்பிக்கப்பட்டது. ஆயினும் நிதியின்மை காரணமாக அந்தத் திட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

(எ-இ)

## ஆட்சியை கவிழ்க்கும் எண்ணமில்லை



கொழும்பு, ஓக.13

ஆட்சியைக் கவிழ்ப்பதற்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எவ்வித சூழ்ச்சியும் செய்யவில்லை என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். அந்தப் பொறுப்பில் இருந்து விலகிவிடமுடியாது. நாம் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு சூழ்ச்சி செய்யவில்லை. முதலில் அரசாங்கம் உறுதிமொழிகளை நிறைவேற்றிக்காட்ட வேண்டும் - என்றார். (ச-44)



## மீகொடவில் துப்பாக்கிச்சூடு ஒருவர் பலி

கொழும்பு, ஓக.13

மீகொடவில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஹோமாகம பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் காயமடைந்தநிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார். (ச-இ)

## படகு கவிழ்ந்து தந்தை, மகன் சாவு

கொழும்பு, ஓக.13

பொலனறுவை பராக்கிரம சமுத்திரத்தில் படகொன்று கவிழ்ந்ததில் இருவர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில், 72 வயதான தந்தையும் அவரது 38 வயதுடைய மகனுமே உயிரிழந்தனர் என்று தெரியவந்துள்ளது.

அதேவேளை படகு கவிழ்ந்ததில் நீரில் மூழ்கிய மேலும் எட்டுப் பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## ராஜிதவுக்குப் பிடியாணை

கொழும்பு, ஓக.13

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ணவுக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

முன்னாள் அமைச்சர் வாக்குமூலம் அளிப்பதைத் தவிர்த்துவருகின்றார் என இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு நீதிமன்றத்துக்குத் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்தே நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது. (ச-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைத் தேர்தல் விடயத்தில் மக்களை ஏமாற்றுகிறது அரசு

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

மாகாணசபைத் தேர்தல் விடயத்தில் அரசாங்கம் நாட்டுமக்களை ஏமாற்றுகின்றது. மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு இதுவரை எந்த நடவடிக்கையும் அரசாங்கம் எடுக்கவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது:-

நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டிய பொறுப்பு ஆட்சிக்குவரும் சகல அரசாங்கங்களுக்கும் உண்டு. இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பொருட்டு மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. தேர்தல் முறைமை காரணமாக மாகாணசபைத் தேர்தல் பல ஆண்டுகாலமாக காலவரையறையின்றிப் பிற்போடப்பட்டுள்ளது.

மாகாணசபைத் தேர்தலுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று அரசாங்கம் நாட்டுமக்களை ஏமாற்றுகிறது. இந்த விடயத்தில் அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடன் செயற்படவில்லை.

மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்குரிய சாதகமான சூழல் தற்போது தோற்றம்பெற்றுள்ளது. அதை அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். தேர்தலை வெகுவிரைவில் நடத்தவேண்டும்-என்றார். (எ-இ)

## நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஓக.13

ஜனாதிபதி செயலகம் வடக்கு மாகாணசபை, யாழ்ப்பாண மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் இணைந்து நடத்தும் விசேட நடமாடும் சேவை இன்று தொடக்கம் எதிர்வரும் 20ஆம் திகதி வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெறவுள்ளது. 'இதயபூர்வமாக யாழ்ப்பாணத்துக்கு' எனும் தொனிப்பொருளில் இந்த நடமாடும் சேவை நடைபெறவுள்ளது. (ச)

# ஆட்சியைக் கைப்பற்றவே முயற்சிக்கின்றது ஐ.தே.க!

*அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் தெரிவிப்பு*

கொழும்பு, ஓக.13

ஆட்சிக்கு வருவதே ஐக்கிய தேசியக் கட்சியின் முயற்சியாகவும் இருக்கின்றது. அதற்காக தனித்தும், கூட்டணியாகவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து ஒருவருடம்தான் ஆகின்றது. அரசாங்கத்துக்குள் ஏற்பட்டுள்ள பிளவுமூலம் உரிய பிரதிபலனை, உரிய நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுக்கொள்ளும். நேரம்வரும்போது அதற்குரிய அறிவிப்பு வெளியாகும்.

தேர்தல்மூலம்தான் ஆட்சிமாற்றம் இடம்பெறவேண்டும் என ஜனாதிபதி கூறுகின்றார். சிலவேளை நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப்பலம் ஊடாக அந்த மாற்றம் இடம்பெற்றால்? எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம்.

நாட்டில் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கக்கூடிய ஒரே தலைவர் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்தான். அதனால்தான் அவர் இலக்குவைக்கப்பட்டுள்ளார். நெருக்கடியின்போது நாட்டைரணில் பொறுப்பேற்று தேர்தலை நடத்தியதால்தான் இந்த ஆட்சியாளர்களால்கூட ஆட்சிக்கு வரமுடிந்தது. நாமும் ஆட்சியைப் பெறுவதற்கு முயற்சிப்போம். கூட்டாக அல்லது தனித்து இதற்குரிய நடவடிக்கை எடுக்கமுடியும் - என்றார். (எ-44)

வவுனியா


# உக்குளாங்குளத்தில் வீடொன்றில் தாக்குதல்

வவுனியா, ஓக. 13

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில்உள்ளவீடொன்றின் மீது இனந்தெரியாத நபர்கள் நேற்றுத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பில் பொலிஸாரிடம்முறையிடப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். [illegible]


# மரண அறிவித்தல்



அன்னை மடியில்
20.07.1952

இறைவன் அடியில்
12.08.2025

## சிவஞானம் ரகுநாதன்

**(K.S.Ragu)**

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், சாவகச்சேரி, மற்றும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் ரகுநாதன் அவர்கள் நேற்று (12.08.2025) செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் யாழ். மணிக்குரல், சாவகச்சேரி கவிஸ்ரன், யாழ் FM வானொலி சேவை என்பவற்றில் அறிவிப்பாளராகவும், போட்டோ ரகுப்பிரியா புகைப்பட கலையக உரிமையாளரும், துளிர்கள் நிறுவனத்தின் இயக்குனராகவும், இறுதியாக XPERT MEDICS நிறுவனத்தின் ஆலோசகராகவும் பல துறைகளில் சேவை புரிந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஞானம் - சிவபாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், சுதர்ஜனாவின் (சுதா) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - அன்னம் தம்பதியரின் மூத்த மருமகனும், ரகுசுதன், பிரியா, அனுப்பிரியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பக்தகௌரி, காலஞ்சென்ற பகீரதன், தர்மசீலன் (கஜன்) ஆகியோரின் மாமனாரும், ஜெய் சாய்நிகேதன் (சாய்), கிஷோதனன் (கிஷோத்), கவிலாஷி (கவிஷி) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற பாலசரஸ்வதி, செல்வராணி, குணநாதன், காலஞ்சென்ற சிவலோகநாதன், சற்குணநாதன், சிவபாக்கியநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ராசரத்தினம், தவராஜசேகரம், ரத்தினசோதி, வவா, நிர்மலாதேவி (சுபா), குணரூபா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2025) புதன்கிழமை பகல் 12.00 மணிக்கு மட்டுவில் தெற்கு சாவகச்சேரியில் உள்ள அவரின் தாயாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நெனியன் மயானத்திற்கு பி.ப 2.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப் படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

0094 77 7347397 (சுதன்)
0094 77 3946232 (பிரியா)
0094 77 7206568 (அனு)
0094 74 2014819 (கிஷோத்)

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 45796) A



## மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்திற்கு சொந்தமான பயிர்ச்செய்கை காணிகள் 2025 ஆம் ஆண்டிற்கான காலபோக செய்கைக்கு மட்டும் குத்தகைக்கு விடப்பட உள்ளது

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழும், புதுமுறிப்பு குளத்தின் கீழும், பூநகரி நல்லூர் பகுதியிலும் எமது மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்திற்கு சொந்தமான பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வரும் பின்வரும் கமக்கார அமைப்புக்களுள் உள்ள எமது பயிர்ச்செய்கை காணிகள் 2025ம் ஆண்டு காலபோக செய்கைக்கு மட்டும் எதிர்வரும் 23.08.2025 (சனிக்கிழமை) அன்று காலை 9.00 மணிக்கு சிறுவர் இல்ல பிரதான அலுவலகம் ஜெயந்திநகரில் A9 வீதிக்கு மேற்குப்புற பகுதியில் அமைந்துள்ள பயிர்ச்செய்கை காணிகளும், மதியம் 03 மணிக்கு கிளிநொச்சி பன்னாங்கண்டி கிராம அலுவலர் அலுவலகம் அருகாமையில் A9 வீதிக்கு கிழக்குப்புறமாக உள்ள பயிர்ச்செய்கை காணிகளும் பகிரங்க ஏலத்தில் குத்தகைக்கு வழங்குவதற்கு முகாமைக்குழு தீர்மானித்திருப்பதால் பயிர்ச்செய்கையினை மேற்கொள்ள விரும்பும் விவசாய பெருமக்களாகிய தாங்கள் ஏக்கர் ஒன்றிற்கு தங்களால் வழங்கக்கூடிய ஆகக் கூடிய தொகையினைக் கோரி பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு : பயிர்ச்செய்கையினை மேற்கொள்ள தெரிவு செய்யப்படும் விவசாயிகள் கோரியுள்ள குத்தகைத்தொகையினை முழுமையாக அன்றைய தினமே செலுத்துதல் வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம் அத்தோடு ஏல விற்பனை தொடர்பில் எமது ஏல விற்பனைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாக இருக்கும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

காணிகள் விபரம்

| இல | காணி விபரம் | அளவு | ஏல விற்பனை நடைபெறும் இடம் | நேரம் |
|---|---|---|---|---|
| 01 | உருத்திரபுரம் 09ஆம் கமக்கார அமைப்பின்கீழுள்ள வயல் | 04 ஏக்கர் | மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்ல பிரதான அலுவலகம் | காலை 9.00 AM |
| 02 | புதுமுறிப்பு சிவநகர்கமக்கார அமைப்பின்கீருள்ள வயல் | 10 ஏக்கர் | | |
| 03 | பூநகரி நல்லூர் வயல் | 03 ஏக்கர் | | |
| 04 | பூநகரி சாமிப்புலம் வயல் | 06 ஏக்கர் | | |
| 07 | திருவையாறு மகிழங்காடு கமக்கார அமைப்பின் கீழ் நாகபூசணி வயல் | 20 ஏக்கர் | கிளிநொச்சி பன்னங்கண்டி கிராம அலுவலர் அலுவகம் அருகாமை | பி.ப 3.00PM |
| 08 | முரசுமோட்டை கமக்கார அமைப்பின் கீழ் முரசுமோட்டை வயல் | 26 ஏக்கர் | | |
| 09 | திருவையாறு மகிழங்காடு கமக்கார அமைப்பின் கீழ் உலாந்தா கமம் | 26 ஏக்கர் | | |
| 10 | திருவைாறு மகிழங்காடு கமக்கார அமைப்பின் கீழுள்ள வயல் | 10 ஏக்கர் | | |

தொடர்பு முகவரி
ச.மோகனபவன்
தலைவர்
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி.

தொலைபேசி இலக்கம்: 0773240950 , 0214923118

(CR/45797) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகச்சிறந்த கேளிக்கை
கொண்டாட்டம்
ஓசையின்றி
நடந்துகொண்டிருக்கிறது
அதுதான் புத்தக வாசிப்பு
- எமர்சன்



வாசிப்பதால், மனிதம் என்னவென்று அறியப்படலாம். மானுடநேயத்தைக் கற்றுக்கொள்ளலாம். சமூக அக்கறை மேம்படும். உறவுகள் நெருக்கமாகும். குடும்ப மட்டத்தில் நல்ல சிந்தனைகள் எழலாம். அதனால் குடும்பத்தில் வன்முறைகள் என்னவென்று அடையாளப்படுத்தப்படும். அதனால் குடும்பங்களில் குடும்ப வன்முறை இல்லாதுபோகும். குடும்பத்தை அதிகம் நேசிப்பீர்கள்.

# வாசிப்பை மகத்துவமாக்கும் புத்தகத் திருவிழா!

கணபதி சர்வானந்தா

உதயனின் ஊடக அனுசரணையில், யாழ்ப்பாண தொழிற்றுறை மன்றத்தின் ஏற்பாட்டில் இரண்டாவது சர்வதேசப் புத்தகத் திருவிழா, நாளைறுமதினம் 15ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதிவரை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் இடம் பெறவுள்ளது.

ஏன் நீங்கள் இந்தப்புத்தகக் கண்காட்சியில் பங்குகொள்ளவேண்டும்? ஏன் புத்தகங்களை வாங்கவேண்டும்? வாசிப்பு ஏன் அவசியம்? என்ற கேள்விகளுக்கு வாசிப்பால் உயர்ந்த பலர் பதில் அளித்திருப்பதை அந்தப் புத்தகத் திருவிழாவில் வந்து குவியப்போகும் புத்தகங்கள் உங்களுக்கு உணர்த்தவிருக்கின்றன.

வாசிப்புப் பழக்கமானது ஒரு மனிதனை அகமும், புறமும் புடம்போடவல்லது அதனைக் கண்டறிந்தவர்களே பின்நாளில் மாமேதைகளாகத் திகழ்ந்தார்கள் என வரலாறு சொல்கிறது. மாமனிதர்கள் என்று போற்றப்பட்ட பலரின் சுயசரிதத்தை வாசித்தபோதெல்லாம் அவர்கள் வாசிப்பைத் தமது இடைவிடாத பழக்கங்களில் ஒன்றாகக் கொண்டிருந்தனர் என்பது தெரியவருகிறது. அவர்கள் வாசித்தனர் பின்னர் வாசித்ததை தமக்குள் அடக்கிக் கொள்ளாது பலருக்கும் பயனளிக்கும் வகையில் உலகுக்கு உவந்தளித்துச் சென்றுவிட்டதையும் வாசிப்பதால்தான் நாம் அறிந்து கொள்கிறோம்.

வாசிக்கப் பிடிக்கவில்லையா? அல்லது வாசித்துப் பழக்கமில்லையா? அல்லது வாசிப்பது பற்றி எவரும் உங்களுக்குச் சொல்லித்தரவில்லையா? பரவாயில்லை. ஒரு புத்தகத்தை எடுத்துக்கொள்ளுங்கள். பக்கத்தைப் புரட்டுங்கள். சில நிமிடங்களுக்குப் புரட்டிக்கொண்டே இருங்கள். ஏதோ ஒரு பக்கத்தில், ஏதோ ஒரு எழுத்தில் உங்கள் பார்வை நிலைகொள்ளும். அப்போது அந்தப் புத்தகத்தை மூடிவைத்துவிடுங்கள். பின்னர் ஓரிரு தடவைகளுக்கு இப்படியே செய்துபாருங்கள். உங்களை அறியாது நீங்கள் வாசிக்கத் தொடங்கி விடுவீர்கள்.

இதுவரை புத்தகம் எதனையும் வாங்கவோ, வாசிக்கவோ சந்தர்ப்பம் கிட்டாத உங்களை நோக்கிப் புத்தகங்களை ஒருவர் கொண்டுவருவாரேயானால், அது கூட ஒரு பாக்கியம் எனலாம். உங்கள் நலன் கருதி, இம்முறையும் நடைபெறப்போகும் இரண்டாவது சர்வதேசப் புத்தகத் திருவிழாவில் பலர் உங்களுக்காகப் பல தரப்பட்ட புத்தகங்களைக் கொண்டுவர இருக்கின்றனர். அந்த ஆரோக்கியமான விடயத்தைச் சொல்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். காரணம் அந்தப் புத்தகத் திருவிழாவால் பல நன்மைகள் நடைபெறப்போகின்றன.



## வாசிப்பின் மகிமை

வாசிப்பதால், மனிதம் என்னவென்று அறியப்படலாம். மானுட நேயத்தைக் கற்றுக்கொள்ளலாம். சமூக அக்கறை மேம்படும். உறவுகள் நெருக்கமாகும். குடும்ப மட்டத்தில் நல்ல சிந்தனைகள் எழலாம். அதனால் குடும்பத்தில் வன்முறைகள் என்னவென்று அடையாளப்படுத்தப்படும். அதனால் குடும்பங்களில் குடும்பவன்முறை இல்லாது போகும். குடும்பத்தை அதிகம் நேசிப்பீர்கள்.

விசேடமாகக் குழந்தைகளுக்கானதும் குழந்தைகள் பற்றியும் அதிக நூல்கள் வரவிருக்கின்றன. அதனால் குழந்தைகள் பற்றி அதிகம் அறிந்துகொள்ளலாம்.

வாசிப்பதால் இயற்கை பற்றிய பல விடயங்களை அறிவீர்கள். இயற்கையை நேசிப்பீர்கள். அதனால் மரம் வெட்டுவதை நிறுத்திக் கொள்வீர்கள். காடழிப்புக்கு எதிராகக் குரல்கொடுப்பீர்கள். காடு பாதுகாக்கப்பட்டு மழை பருவத்தே வரும். அதனால் வேளாண்மை பெருகும். அத்துடன் அரசுக்கும் உங்களுக்கும் உள்ள தொடர்பு என்னவென்று அறிவீர்கள். அதனால் சரியானவர்களுக்கு வாக்களிப்பீர்கள். மொத்தத்தில் நாடும், வீடும் நலம்பெறும்.

வாசிப்பின் மகத்துவத்தை அறியாதவரே நான் வாசிப்பது இல்லை என்று பெருமையாகச் சொல்கிறார். ஓர் உதாரணம் சொல்கிறேன். கைத்தொலைபேசியை எடுத்துக்கொள்ளுங்கள். அது புதியதாக இந்த உலகுக்கு அறிமுகப்படுத்தப்பட்டபோது அதன் உள்ளடக்கத்தை யாரும் அறிந்திருக்கவில்லை. பின்னர் அதில் உள்ள வசதி வாய்ப்புகளைப் பற்றி உபயோகித்து அறிந்தவர்களின் அனுபவத்தைக் கேட்டு அறிந்தபோதே அதனை நோக்கிப் படையெடுக்கத் தொடங்கினர். தற்போது எல்லோர் கைகளிலும் கைத்தொலைபேசிகள் பாவனையில் உள்ளன. கைத்தொலைபேசி இல்லாவிட்டால் வாழ்கையே இல்லை என்ற அளவுக்கு அதன் பயன்பாடு அதிகரித்திருக்கிறது. இருந்தும் பலருக்கு அது போதையாகிவிட்டதையும் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. அது போதையானால் அது உங்களைத் தவறாகவும் வழிநடத்த வாய்ப்புண்டு என்பதை மறக்கவேண்டாம்,

இந்தப் புத்தகங்கள் காட்சிப்படுத்தலும், விற்பனையும் ஒரு புத்தகத் திருவிழாவாக நடக்கவிருக்கிறது. எனவே நேரத்தை ஒதுக்கி உங்கள் குடும்பத்தோடு செல்லுங்கள். உங்கள் வீட்டுமுற்றத்திலே நடைபெறவிருக்கும் இந்தத் திருவிழா உங்களுக்கானது. எனவே இந்தத் திருவிழாவுக்கு நீங்கள் கொடுக்கப் போகும் ஆதரவே இவ்வாறான நிகழ்வுகள் எமது சமூகத்தில் தொடர்ந்து நடப்பதற்கு மூலகாரணமாயிருக்கப்போகிறது. எனவே இந்த நிகழ்வு நடைபெறும் தினங்களில் ஒரு நாளாவது சில நிமிடங்களை ஒதுக்கி, முக்கியமாகக் குடும்ப உறுப்பினர்களோடு அங்கு செல்லுங்கள். புத்தகங்களை வாங்காவிட்டாலும் அவற்றை எடுத்து அதன் பக்கங்களை ஒருமுறை புரட்டுவதற்குரிய சந்தர்ப்பத்தை உங்கள் விரல்களுக்குக் கொடுங்கள். அதனூடே ஒரு பாரிய மாற்றத்தை உணர்வீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் செயற்றிறனே உலகின் வினைத்திறன்!

■ நடராசா கோபிராம்
*உளவியல் சிறப்புக்கலை மாணவன்*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

ஒவ்வொரு மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்கான சக்தி, கனவுகளால் மட்டுமல்ல அந்தக் கனவுகளை செயலாக்கும் இளைஞர்களால்தான் அமைகிறது. உலக அளவில் இளைஞர்களின் சமூக, பொருளாதார, அரசியல் பங்களிப்பை முன்னிறுத்தும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. உலக இளைஞர்களின் எதிர்பார்ப்பு, சவால்கள், சமூகப் பங்களிப்பு போன்றவற்றைப் பொதுவாக உலகம் அறியச்செய்வதும், இளைஞர்கள் எதிர்நோக்கும் வேலைவாய்ப்புக் குறைபாடு, கல்வி வாய்ப்புகள், பாலின சமத்துவம், மனஅழுத்தம், அரசியல் புறக்கணிப்பு போன்றவற்றில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதுமே இந்தத் தினம் கடைப்பிடிக்கப்படுவதன் நோக்கம். உலகளவில் சுமார் 1.8 பில்லியன் இளைஞர்கள் உள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் வளர்ந்துவரும் நாடுகளில் வாழ்கிறார்கள்.



**இன்றைய இளைஞர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்**

உலகளவில் 13 வீதமான இளைஞர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் வாழ்ந்துவருகின்றனர். அதே சமயம், வேலைக்காக தற்காலிக வேலைகள் அதிகரித்துவருவதால், இளைஞர்களுக்கு பங்கு பெறும் தொழில்துறை நிலை தடுமாறுகிறது.

சர்வதேச இளைஞர் தினம் ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதியான நேற்று உலக நாடுகளில் கொண்டாடப்பட்டுள்ளது. அதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

**டிஜிற்றல் வேறுபாடு**

2023ஆம் ஆண்டில் உலக பொருளியல் அமைப்பு வழங்கிய தகவல், 40 வீதமான கிராமப்புற இளைஞர்கள் இணையக் கல்வி மற்றும் தொழில்நுட்ப வசதிகளுக்கு அணுகல் இல்லாத நிலைமையில் உள்ளார்கள் என்று கூறுகின்றது. இலங்கையில் இணையக் கற்கைக்கான அரச திட்டம் 2023ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. ஆனால் இன்னும் பலரை அந்தத்திட்டம் சென்றடையவில்லை.

**மனநலப் பிரச்சினைகள்**

உலகளாவிய மனநலம் தொடர்பான தகவல்களின்படி, இளம் வயதுக் குட்பட்டவர்களில் 15 தொடக்கம் 24 வயதுக்குட்பட்ட இளைஞர்களிடத்தில் 25 வீதமானவர்களுக்கு மன அழுத்தம் மற்றும் மனஆரோக்கியக் குறைபாடுகள் அடிக்கடி ஏற்படுகின்றன. தற்கொலையில் இளைஞர்களே அதிகம் ஈடுபடுகின்றனர்.

**மாற்றத்தை ஏற்படுத்தும் சக்தியாக இளைஞர்கள்**

இன்று இளைஞர்கள் பலர் சர்வதேச அளவில் ஆதிக்கம் செலுத்தும் சக்தியாக மாறியிருக்கின்றனர். கிரைட்டா தன்பேர்க் போன்ற இளைய சூழலியல் செயற்பாட்டாளர்கள் உலகளாவிய பருவநிலை மாற்றத்தை தடுக்கப் போராடிவருகிறார்கள். செஞ்சிலுவைச் சங்கத்தின் இளைஞர் அமைப்புகள் கடந்த வருடம் கொவிட் தடுப்பு நடவடிக்கைகளில் முக்கியமான பங்கு வகித்தன. இலங்கையிலும் இத்தகைய செயற்பாடுகளை அவதானிக்கமுடிந்தது.

**இலங்கை இளைஞர்களின் சமகால முன்னேற்றங்கள்**

இலங்கை இளைஞர்களின் தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்த 'எதிர்காலத்துக்கான திறன்கள்' என்ற திட்டம் 2023ஆம் ஆண்டில் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்மூலம் பல இளைஞர்கள் தொழில்நுட்ப, தொழில் முனைவோர் திறன்களைக் கற்றுக்கொண்டுள்ளனர். 'ஸ்டார்அப்' துறையில் இலங்கை இளைஞர்கள் 2024ஆம் ஆண்டில் மிகச் சிறந்த முன்னேற்றங்களைச் செய்துள்ளனர்; புதிய தொழில்நுட்பம் கொண்டுவரும் நிறுவனங்கள் அதிகரித்துள்ளன. இலங்கை இளைஞர்களால் முன்னெடுக்கப்படும் விவசாயத் தொழில்கள் சுற்றுச்சூழல் சிந்தனையுடன் இணைந்து வளர்கின்றன. சமூக மற்றும் கலாசார விழாக்களில் இளைஞர்கள் முக்கியமான பங்காற்றி, நாட்டின் ஒற்றுமையை ஊக்குவிக்கின்றனர்

**எதிர்காலத்தின் தூண்கள்**

உலகம் இன்று எதிர்கொள்ளும் பருவநிலை மாற்றம், அமைதியின் இழப்பு, வேளாண்மை நெருக்கடி, வேலைவாய்ப்புப் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வுகளை உருவாக்குபவர்கள் இளைஞர்களே. அவர்களுக்கான உற்சாகம், வழிகாட்டுதல் மற்றும் தகுந்த இடம் வழங்கப்பட்டால், உலகம் ஒரு புதிய சகாப்தத்தை நோக்கிப் பயணிக்கும். அதனால்தான், உலக இளைஞர் தினம் என்பது ஒரு விழிப்புணர்வு நாள் மட்டுமல்ல அது ஒரு இயக்கம் - நம் எதிர்காலத்தை வடிவமைக்கும் இயக்கம்!

# ஜூலைக் கலவரம்

■ ஊடகவியலாளர் எம்.ஐ.முபாறக்




# இலங்கையின் வரலாற்றையே மாற்றி எழுதிய திருநெல்வேலி

**புலிகளைத் தேடும் ஹெலிகொப்டர்...**

கொழும்பில் பல சம்பவங்கள். அவற்றுள் இதுவும் ஒன்று. ஜூலை 29ஆம் திகதி ஓரளவு அமைதி. வீதியை எட்டிப் பார்க்கின்றன தலைகள். ஓரளவு மக்கள் நடமாட்டம். அகதி முகாம்களுக்குச் செல்கிறார்கள். உறவினர்களைப் பார்க்கிறார்கள். கட்டிப்பிடித்து அழுகிறார்கள். உணவு உடைகள் கொடுத்து உதவுகிறார்கள்.

இத்தோடு நின்றுவிடவேண்டும். எல்லோரது பிரார்த்தனையும் அது.

அது நடந்ததா...?

இல்லை...

மீண்டும் பிரச்சினை. என்ன அது...? திடீர்ச் சலசலப்பு கொழும்பில்.

காரணம்...???

சுட்டுக் கொல்லப்படுகிறார்கள் சிங்கள இளைஞர்கள் இருவர். காஸ் வேர்க்ஸ் வீதியில் சம்பவம். காட்டுத் தீயாய் பரவுகிறது தகவல்.

'கொழும்பில் புலிகள் சிங்களவர்களைக் கொல்கிறார்கள். படையினருடன் சண்டை. அதிக மரணம்'

இவ்வாறு வாய்க்கு வந்தமாதிரி... மீண்டும் தமிழர்களை அழிப்பதற்கு வசதியாக... காடையர்களை ஒன்றுதிரட்டுவதற்கு ஏதுவாக... கூடுகிறது பெரும் கூட்டம். விரைந்து வருகிறார்கள் படையினர். நடக்கிறது வேட்டை. மூலை முடுக்குகள் எல்லாம் தேடுதல் வேட்டை.

அங்கே ஒரு கட்டடம். 'அதாம் அலி' கட்டடம். அதற்குள்தான் புலிகள். அங்கிருந்துதான் சுட்டார்கள். தகவல் கொடுக்கிறார்கள் படையினருக்கு. அங்கிருந்த சிலரின் தகவல் இது. பிழையான தகவல்.

பிறகு என்ன...???

சுற்றி வளைக்கிறார்கள் கட்டடத்தை. தரைப்படை,கடற்படை,விமானப்படை, பொலிஸார் இப்படி எல்லோரும் ஒன்றிணைந்து. பெரும் போர் ஒன்றுக்குத் தாயார். உதவிக்கு ஹெலிகொப்டரும். வட்டமிடுகிறது வானில். சுட்டுத் தள்ளுகிறது அங்கிருந்து. பதம் பார்க்கிறது கட்டிடத்தை. அதிர்கிறது அப்பகுதியே. இப்போது படையினர் கட்டடத்தின் உள்ளே. படையினரின் ஒரு பிரிவு வெளியே. கட்டிடத்தைச் சுற்றி. புலிகள் தப்பி ஓட முடியாதவாறு. இன்னொரு பிரிவு உள்ளே. யாருமில்லை. எதுவுமில்லை. ஆயுதங்களும் இல்லை. புலிகள் இருந்ததற்கான தடயமும் இல்லை. எல்லாம் வதந்தி.

அப்போ அந்த இளைஞர்களைச சுட்டது யார்...? நடக்கிறது விசாரணை. சல்லடை போட்டு அந்தப் பகுதி எங்கும் தேடுகின்றார்கள். புலிகள் வரவில்லை. ஆனால்,வதந்தி மட்டும் நிற்கவில்லை. பரவிக்கொண்டே இருக்கிறது.

மீண்டும் ஒரு தாக்குதலுக்கு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துகிறார்கள் காடையர்கள். அப்படியே நடக்கிறது.

நிலைமை மோசம். தப்பி ஓடுகிறார்கள் வீதியில் நின்ற தமிழர்கள் வீதியால் வந்த வாகனங்களில் ஏறிக்கொண்டு. ஆனால்,ஆபத்தே அதுதான். எல்லா வாகனங்களும் சோதனை. புலிகளைத் தேடி.

படையினர் புலிகளைத் தேட... காடையர்கள் அப்பாவிகளைத் தேட... நடக்கிறது வேட்டை. மீண்டும் வேட்டை. மீண்டும் கொடூரம். தமிழர்களின் வாகனங்கள் என்றால் அவ்வளவுதான். கூண்டோடு சரி. அரசு கண்மூடி நிற்க இதெல்லாம் மிகச் சாதாரணமாக நடக்கின்றது.

ஜனாதிபதி மாளிகையில் ஜூலை 25ஆம் திகதி பாதுகாப்புச்சபையின் கூட்டம். பாதுகாப்புச்சபைக் கூட்டம் நடந்துகொண்டிருக்கும்போது எரிகின்றன தமிழர்களின் கடைகள். கூட்டத்தில் இருந்தவர்களுக்கே அந்தத்தீயின் சூடு பட்டிருக்கும். அவ்வளவு அருகில்.. ஆனால் நடவடிக்கையில்லை.

கொழும்பில் மட்டுமா...? அந்தத் தீ ஏனைய மாவாட்டங்களுக்கும் பரவுகிறது களுத்துறையிலும் கலவரம். கண்டிக்கும் நகர்கிறது கலவரம்.

ஜூலைக் கலவரப் படுகொலைகளுள் முக்கியமானது வெலிக்கடை சிறைச்சாலைப் படுகொலை. தங்கதுரை, குட்டிமணி என 51 பேர் சிங்களக் கைதிகளால் கொலை.

இந்தத் பேரழிவைத் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன...???

சூத்திரதாரிகள் யார்...???

பார்ப்போம் அடுத்த தொடரில்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மிதிவண்டி ஓட்டுவதன் பன்முக நன்மைகள்

## ஓர் அறிவியல் பார்வை

■ மருத்துவர் பா.சயந்தன்
குழந்தைகள் சிறுவர்கள் சத்திரசிகிச்சை நிபுணர்
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும்
சிரேஷ்ட விரிவுரையாளர்
மருத்துவபீடம் யாழ்ப்பாணம்



இலங்கையில், அண்ணளவாக 75 வீதமான மரணங்கள் இருதயநோய், நீரிழிவுநோய், புற்றுநோய் மற்றும் சுவாசநோய்கள் போன்ற தொற்றாத நோய்களால் ஏற்படுகின்றன. மொத்த மரணங்களில் 40 வீதமானவை இருதய நோய்களால் ஏற்படுகின்றன. அண்மையில் நடத்தப்பட்ட தேசிய கணக்கெடுப்பில், 22.5 வீதமான ஆண்களும் 38.4 வீதமான பெண்களும் உடல் ரீதியாகச் சுறுசுறுப்பு அற்றவர்களாகக் காணப்படுகின்றனர் எனத் தெரியவந்துள்ளது. உலகளாவிய ஆராய்ச்சி முடிவுகளின்படி, ஒரு நாளைக்குக் குறைந்தது 30 நிமிடங்கள் சைக்கிள் ஓட்டுபவர்களுக்கு இதய நோய், நீரிழிவு மற்றும் உடற்பருமன் அபாயம் என்பன 20 தொடக்கம் 40 வீதமாகக் குறைவதாகத் தெரியவந்துள்ளது.

### தசைத்தொகுதி மற்றும் மன ஆரோக்கியம்

சைக்கிள் ஓட்டுதல் கால் மூட்டு தசைகளை வலுப்படுத்துகிறது, மூட்டு இயக்கத்தை மேம்படுத்துகிறது மற்றும் மூளைக்கு இரத்த ஓட்டத்தை மேம்படுத்துகிறது. இது எண்டோர்பின் எனப்படும் இரசாயனத்தின் வெளியீட்டைத் தூண்டுவதன்மூலம் மன அழுத்தம் மற்றும் பதற்ற அளவைக் குறைக்கிறது. குழந்தைகளின் ஆரம்பக் காலத்தில் சைக்கிள் ஓட்டுதலை அறிமுகப்படுத்துவதன்மூலம் எலும்பு வலிமை, நரம்புத்தசை ஒருங்கிணைப்பு மற்றும் ஆரோக்கியமான உடல் நிறையைப் பேணமுடியும். மேலும் இது நீண்டகால சுகாதார நலன்களுக்கு அடித்தளம் அமைக்கிறது.

### பொருளாதார நன்மைகள்

**சேமிப்பு**

சைக்கிள்கள் வாங்குவதற்கு அதிக பணம் தேவையில்லை, இயக்குவதற்கு எரிபொருள் தேவையில்லை, மற்றும் குறைந்தபட்ச பராமரிப்புச் செலவுகளே ஏற்படுகின்றன. இலங்கையின் கிராமப்புறங்களில், மிதிவண்டிகளைப் பயன்படுத்தி பாடசாலை, பணியிடங்கள் மற்றும் சந்தைகளுக்குச் செல்வதன்மூலம் செலவுகளை 30 தொடக்கம் 35 வீதமாகக் குறைக்கமுடியும் என்று ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

**சுகாதார செலவினம் குறையும்**

தொற்றுநோய்கள் அல்லாத நோய்களின் பரவலைக் குறைப்பதன்மூலம், சைக்கிள் ஓட்டுதல் தனிநபர்களுக்கும் அரசாங்கத்துக்கும் நீண்டகால சுகாதாரச் செலவுகளைக் கணிசமாகக் குறைக்கும்.

**நகரத் திட்டமிடல் திறன்**

சைக்கிள் ஓட்டுவதற்கு குறைந்தபட்ச சாலை மற்றும் சிறிய தரிப்பிட வசதி போதுமானதாகும். மோட்டார் வாகனங்களுக்கான சாலைகளை விரிவுபடுத்துவதைவிட சைக்கிள் பாதைகளை அமைப்பது கணிசமாக மலிவானது. இது நகர்ப்புற வளர்ச்சிக்கு ஒரு பொருளாதாரத் தீர்வாக அமைகிறது.

### சுற்றுச்சூழல் நன்மைகள்

சுத்தமானவளி மற்றும் வளிமண்டலத்தை மாசுபடுத்தும் வாயுக்களின் அளவைக் குறைத்தல். கொழும்பு, கண்டி மற்றும் குருநாகல் போன்ற நகர்ப்புற மையங்கள் வாகனப்புகைகளால் கடுமையான வளிமண்டல மாசுபாட்டை எதிர்கொள்கின்றன. சைக்கிள் மாசு வெளியேற்றம் இல்லாதவை, தீங்கு விளைவிக்கும் வாயுக்கள் வெளிப்படுவதைக் குறைக்கவும் ஒட்டுமொத்த காற்றின் தரத்தை மேம்படுத்தவும் உதவுகின்றன.

மோட்டார் வாகனங்களின் பயன்பாட்டினைக் குறைத்தல் மூலம் அமைதியான மற்றும் பாதுகாப்பான சாலைகளை உருவாக்க வழிவகுக்கின்றன, போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்து அபாயங்களைக் குறைக்கின்றன.

சைக்கிள் ஓட்டுதல் கார்பன் எரிபொருள்களை நம்பியிருப்பதைக் குறைக்கிறது மற்றும் கார்பன் வெளியேற்றத்தைக் குறைக்கிறது, காலநிலை மாற்றத்தைக் குறைப்பதற்கும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கும் பங்களிக்கிறது.

### தடைகள் மற்றும் சவால்கள்

இலங்கையில் சைக்கிள் ஓட்டுதலை ஊக்குவிப்பதில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான சவால்கள் பின்வருமாறு அமைகின்றன. இதன்படி.

1. சைக்கிளோட்டத்தை ஊக்குவிக்கும் உள்கட்டமைப்பு இல்லாமை
2. போக்குவரத்து சட்டதிட்டங்களின் ஒழுங்கின்மை
3. தரமான சைக்கிள்களின் விலை உயர்வும் அவற்றினை பெற்றுக்கொள்ளுதலில் உள்ள சிக்கல்களும்
4. உச்ச போக்குவரத்து நேரங்களில் காற்று அதிகளவில் மாசடைந்து காணப்படுதல்
5. சைக்கிள் ஓட்டுதல் குறித்த விழிப்புணர்வு பொதுமக்களிடையே குறைவாகவும் மற்றும் எதிர்மறை அணுகுமுறைகளும் காணப்படுதல்.

2022 எரிபொருள் நெருக்கடியின்போது, மிதிவண்டிப் பயன்பாடு அதிகரித்தது. ஆனால் எரிபொருள் கிடைக்கும் தன்மை மேம்பட்டவுடன் பயன்பாடு குறைந்தது. இது நீண்டகால திட்டமிடலின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது.

மிதிவண்டி ஓட்டுதல் என்பது போக்குவரத்துக்கான ஒரு வழிமுறை என்பதைவிட இது ஒரு பொதுச்சுகாதாரத் தலையீடு, ஒரு பொருளாதார சேமிப்பு உத்தி மற்றும் சுற்றுச்சூழல் தீர்வாகும். தொற்றுநோய்கள் அல்லாத நோய்களின் அதிகரித்துவரும் சுமை, எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் நகர்ப்புற மாசுபாடு மோசமடைந்துவருதல் என்பவற்றால், இலங்கையில் மிதிவண்டிப் பயணத்தை ஊக்குவிப்பது அவசியமானது.

மிதிவண்டிப் பயன்பாட்டை ஊக்குவிப்பது வெறும் வாழ்க்கை முறை மாற்றம் மட்டுமல்ல, ஆரோக்கியமான சமூகங்கள், தூய்மையான நகரங்கள் மற்றும் நிலையான வளர்ச்சிக்கான பாதையாகும்.

## கலைத்துறை



காலங்காலமாச் சொல்லுற கதைதான் இது.
கலைப்பீடம் என்றாலே ஒரு சின்னப் பார்வைதான்.
மக்களுக்கு சயன்ஸ், மெடிசின் எண்டா பெரிய மதிப்பு,
ஆனா, கலையைப் படிச்சா ஒண்ணும்
இல்லாமப் போயிடும் எண்டு ஒரு இழிப்பு.

ஏன் இந்த எண்ணம்? கலை வெறும் நாடகமும் பாட்டும் மட்டுமா?
மனித மனதை ஊடுருவி, சமூகத்தை உணர்த்தும் ஆயுதமில்லையா?
வரலாறைப் படிக்காமல் எப்படி எதிர்காலம் படைக்கலாம்?
மொழியை அறியாமல், எப்படி உறவுகளைக் கட்டியெழுப்பலாம்?

ஒரு சிற்பி மண்ணில உயிர்கொடுக்கிற மாதிரி,
ஓர் எழுத்தாளன் வார்த்தைகளால் உலகத்தை உருவாக்குகிறான்.
மனித உணர்வுகளுக்கு வெளிப்பாடு இல்லாமப் போனா,
மனுஷன் எதற்கு?

சினிமா, நாடகம், சாமான்யன் மனசுக்குள்ள நுழையும்,
கவிதை, சிறுகதை அவன் வாழ்க்கைக்கு அர்த்தம் சொல்லும்.
ஒரு சமூகத்தோட வேர்கள்,
அவன்ட பண்பாடு, கலைகளில்தானே நிலைச்சிருக்கு.

மற்றப் பீடங்கள் உடம்பையும், பொருளாதாரத்தையும் வளர்க்கும்,
ஆனா, கலைப்பீடம் ஒரு சமூகத்தோட ஆன்மாவை உருவாக்கும்.
காலம் காலமாச் சொல்லுற கதைதான் இது.
கலைப்பீடம் என்றாலே ஒரு சின்னப் பார்வைதான்.

மு.இ.நிழ்வான்
கிழக்குப் பல்கலைக்கழக மாணவன்


புதன்பொய்கைக்கு
நீங்களும் எழுதலாம்
● கட்டுரைகள்
● கவிதைகள்
● விமர்சனங்கள்
● நூல் அறிமுகம்
● பதிவுகள்
● அறிவியல்
● கலைப்படைப்புகள்
அனுப்பவேண்டிய முகவரி:
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழியல் மாநாடு;

# தமிழின் இருப்புக்கும், நேசிப்புக்குமான திறவுகோல்!



நேர்காணல்: ஆதவன்

## யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபனுடன் ஒரு நேர்காணல்

**கே: யாழ். பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறையின் ஏற்பாட்டில் ஆறாவது தமிழியல் ஆய்வுமாநாடு நடைபெறவுள்ளது. தமிழுக்கு மகுடம் சூட்டும் வகையில் கடந்த காலங்களில் தமிழியல் மாநாடு வெவ்வேறு தொனிப்பொருள்களில் சிறப்பாக நடைபெற்றிருந்தது. இம்முறை தமிழியல் மாநாட்டின் தொனிப்பொருள் என்ன?**

ப: எதிர்வரும் 15.08.2025 வெள்ளிக்கிழமை அன்று தமிழ்த்துறை தனது ஆறாவது தமிழியல் ஆய்வு மாநாட்டை முன்னெடுக்கின்றது. வழக்கம் போலவே சிங்கப்பூர் எஸ்டேட் கந்தையா கார்த்திகேசன் அறக்கட்டளை தனது முழுமையான நிதிப்பங்களிப்பினை இம்மாநாட்டுக்கு வழங்கியுள்ளது.இதனுடைய தொனிப்பொருளாக 'தமிழ் மொழி, இலக்கியச் செழுமையில் ஆழ்வார் பாசுரங்கள்' என்னும் தொனிப்பொருள் அமைந்துள்ளது.

**கே: ஆழ்வார்பாசுரங்களை இந்த மாநாட்டின் கருப்பொருளாக அமைத்ததன் பின்னணி யாது?**

ப: தமிழ், இந்தியாவில் தோன்றிய மதங்களுக்கு மட்டுமல்லாது பிறநாடுகளில் தோற்றம்பெற்ற மதங்களிற்கும் அனுபவ வெளிப்பாட்டு மொழியாக அமைந்துள்ளது. குறிப்பாகத் தமிழ்ப் பண்பாட்டில் சைவம், வைணவம், சமணம், பௌத்தம் முதலான மதங்களுக்கும் இது அனுபவ வெளிப்பாட்டு மொழியாக அமைந்துள்ளது. இப்பின்புலத்தில் தமிழ்மொழி, இலக்கியப் பாரம்பரியத்தில் சமயங்கள் ஏற்படுத்திய தாக்கவிளைவுகள் குறித்த புலமைசார் சிரத்தையினைப் பார்க்கின்றபொழுது, வைணவமதம் தமிழ்மொழியில் ஏற்படுத்திய தாக்கவிளைவுகள் குறித்த மதிப்பீடுகள் ஒப்பீட்டு நிலையில் மிகவும் அருந்தலாகவே உள்ளன. பக்தியைப் பேசுகின்ற தமிழ்மொழியின் குழைவில் ஆழ்வார்களின் பங்களிப்பை யாரும் மறுதலித்துவிட முடியாது. இதனை மையமாகக் கொண்டு இம்மாநாட்டிற்குத் தொனிப்பொருள் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

**கே: தமிழியல் மாநாட்டின் தனித்துவமே அதில் கலந்துகொள்ளும் பங்கேற்பாளர்கள்தான். தமிழ்மொழிக்கு செழுமை சேர்த்த ஆளுமைகளே இதில் பங்கேற்பாளர்களாக அமைவதும், அவர்களின் உரைகளால் மாநாடு மதிப்புறுவதும் தமிழியல் மாநாட்டின் அடையாளமாகவே மாறிவிட்டது. அந்தவகையில் இம்முறை பங்கேற்பாளர்களாக கலந்துகொள்வோர் குறித்து சொல்லமுடியுமா?**


ப: இதுவொரு அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு. இலங்கையிலுள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களைச் சார்ந்த அறிஞர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் மட்டுமல்லாது இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, இந்தியா போன்ற நாடுகளைச் சார்ந்த தமிழ் ஆர்வலர்களும் இம்மாநாட்டில் பங்கேற்கின்றார்கள். இந்த மாநாட்டின் திறப்புரைஞராகச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழிலக்கியத்துறையின் மேனாள் தலைவர் பேராசிரியர் அரங்க. இராமலிங்கம் கலந்துகொண்டு இம்மாநாட்டைக் கனதியாக்கவுள்ளார்.

**கே: மாநாட்டில் சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகள் குறித்தும், அமர்வுகள் எண்ணிக்கை, பெயரிடல்கள் குறித்தும் சொல்லமுடியுமா....?**

ப: 215 ஆய்வுச் சுருக்கங்களும் கட்டுரைகளென்ற வகையில் 94 கட்டுரைகளும் எமக்குக் கிடைக்கப்பெற்றன. அவற்றை உரியமுறையில் ஆய்வுசெய்து அதில் 55 கட்டுரைகள் அளிக்கைக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. தெரிவுசெய்யப்பட்ட கட்டுரைகள் நான்கு அமர்வுகளில் அளிக்கை செய்யப்படவுள்ளன. பேராசிரியர்களான சு.வித்தியானந்தன், ஆ. சதாசிவம், சி. தில்லைநாதன், செ. யோகராசா ஆகிய தமிழ் ஆளுமைகளின் பெயர்களில் அமர்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

**கே: இம்மாநாடுடன் தொடர்புடைய இணைச் செயற்பாடுகள் கடந்த மாநாடுகளில் முன்னெடுக்கப்பட்டன. இம்முறையும் அவை தொடருமா?**

ப: வடக்கு மாகாணத்திலுள்ள வவுனியா, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போன்ற கல்வேறு கல்வி வலயங்களையும் சார்ந்த பாடசாலைகளிலுள்ள உயர்தர மாணவர்களிடையே தமிழை ஒரு பாடமாகக் கற்கின்றவர்களிடத்துத் தமிழறிவுப் போட்டியொன்றை நடத்தி, அதில் வெற்றிபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. அதுமட்டுமல்லாமல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர்களிடையேயும் தமிழறிவு வினாவிடைப் போட்டியொன்றை நடத்தி அதில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான கௌரவிப்பும் இடம்பெறவுள்ளது. மேலும் தமிழிற்குத் தொண்டாற்றிய ஓய்வுபெற்ற பேராசிரியர்கள் மூவரும் மூத்த படைப்பாளுமையென்ற தகுதிப்பாட்டில் ஒருவரும், பக்தியிலக்கியங்களைத் தன்னுடைய பொழிவுகளோடு பராதீனப்படுத்திய வகையில் உயர் ஆளுமைக்காக ஒருவரும் கௌரவம் பெறவுள்ளனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தினர் மற்றும் நுண்கலைத்துறையினர் இணைந்து, இதுவரை காலமும் நடைபெற்ற



தமிழியல் ஆய்வு மாநாடுகள் குறித்ததானதொரு புகைப்படக் கண்காட்சியினையும் ஒழுங்குபடுத்தியுள்ளனர்.

**கே: ஆறாவது முறையாக நடக்கும் தமிழியல் மாநாட்டால் விளைந்த பேறுகள் எவையென எண்ணுகின்றீர்கள்?**

ப: மாணவர்களிடையே தமிழறிவு தொடர்பான விடயங்களை மிகுவிப்பது, தமிழ்ச்சூழலில் ஆய்வுப் பண்பாட்டிற்கானதொரு களமாக இம் மாநாட்டை அமைத்தல், தமிழுக்கும் தமிழ்க் கலைகளுக்கும் பங்காற்றியவர்களைக் கௌரவிப்பதனூடாக, அதேதடத்தில் இளைய தலைமுறையினரையும் ஈர்த்துக்கொள்ளல் போன்ற பலவற்றை தமிழியல் மாநாடு நிகழ்த்திக்காட்டியிருக்கிறது. இனியும் நிகழ்த்தும்.

**கே: அண்மைக்காலமாகத் தமிழ்மொழிப்பாட அடைவில் பாடசாலை மட்டத்தில் ஒரு வீழ்ச்சிப்போக்கு இருப்பதாகப் பலரும் குறைகூறுகின்றார்களே?**

ப: அவ்வாறு குறிப்பிடமுடியாது. ஆனாலும் அவ்வாறு இருப்பின், அதற்குப் பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன. பாடவிதானம், கற்பிக்கும் ஆசிரியர்கள், கற்பித்தல் முறை என்பன இவ்விடத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதற்கும் மேலாகப் பாடசாலைகள் பலவற்றிலும் பணியிலுள்ள தமிழாசிரியர்கள் பலரும், பல்கலைக்கழக நிலையில் தமிழைப் பொதுக்கலையிலோ, சிறப்புக்கலையிலோ ஒரு பாடமாகக் கற்காதவர்களாகவே காணப்படுகின்றனர். அதற்கு நாம் பொறுப்பேற்க முடியாது. மாணவர்களிடத்தும் இன்று வாசிப்புப்பழக்கம் அருகிவிட்டது. தற்போதைய சூழலில் நவீன இலத்திரனியல் ஊடகங்களில் மாணவர்கள் ஆழ்ந்து போய்க்கிடக்கின்றார்கள். இதனால் மாணவர்களின் கல்வியில் கவனக்கலைப்பான்கள் அதிகரித்துவிட்டன. அதனுடைய பிறிதொரு விளைவாகவே இதனையும் பார்க்கமுடியும்.

**கே: அப்படியானால் பல்கலைக்கழக மட்டத்தில் தமிழ்த்துறையில் கற்கும் மாணவர்களின் நிலைபற்றி..?**

ப: அண்மைக்காலங்களில் தமிழையொரு பாடமாகக் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. ஆனாலும், சிறப்புக்கலையென்று வருகின்ற பொழுது கலைப்பீடத்தினுடைய நெறிமுறைகளிற்கு அமைவாக ஏறக்குறைய 50 மாணவர்களையே நாங்கள் அனுமதித்துக்கொள்கின்றோம். அவர்களுக்கான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளைச் சிறப்பான முறையில் நாம் முன்னெடுத்துவருகின்றோம்.

**கே: தமிழியல் ஆய்வு மாநாடு தன்னுடைய ஆறாவது மைல்கல்லை தொடுவதற்கு யாழ்.பல்கலைக்கழக நிர்வாகமும் எந்தவகையில் உங்களுக்கு துணைநிற்கின்றது?**

ப: நிர்வாகத்தின் முழுமையான பங்களிப்பு இல்லாது விடின் இம்மாநாட்டை சிறப்பாகக் கொண்டாட முடியாது. குறிப்பாக, எங்களுடைய துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராசா, இந்த மாநாட்டை ஓர் ஆக்கபூர்வமான நிலையில் கொண்டாடுவதற்கு எமக்குப் பல்வேறு நிலைகளிலும் பக்கபலமாக உள்ளார். கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் மற்றும் பல்கலைக்கழகப் பிற நிர்வாக மட்டத்தினரும் இது தொடர்பில் எமக்கு பெரும் பக்கபலமாக உள்ளனர். எல்லோரினதும் கூட்டுழைப்பினதும், அர்ப்பணிப்பினதும் விளைவாகவே ஆறாவது தமிழியல் மாநாடு சிறப்புற நடைபெறவுள்ளது.

**கே: தமிழியல் மாநாட்டை யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறை நடத்துவதால், இது தனியே பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமான மாநாடு எனச் சிலர் கூறுவது பற்றி?**

அது தவறான எண்ணம். உண்மையில் இந்த மாநாடு பல்கலைக்கழகத்தில் நடந்தாலும் அதில் கலந்துகொள்வோர், கௌரவிக்கப்படுவோர், கட்டுரை சமர்ப்பிப்போர் என்போரில் பெரும்பாலானோர் பல்கலைக்கழக வட்டத்துக்கு வெளியே இருப்பவர்கள்தான். தமிழ்மொழியை நேசிக்கின்ற, தமிழ் மொழியின் உயர்வுக்கும், உன்னதத்துக்கும், இருப்புக்கும் பாடுபடுகின்ற எல்லோருமே இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவேண்டும். எல்லோரின் வருகைக்காகவும் தமிழியல் மாநாட்டின் கதவு அகலத்திறந்தேயிருக்கின்றது. எனவே தமிழுக்காக எல்லோரும் ஒன்றிணையும் களமாக இந்தமாநாடு அமையவேண்டும் என்பதே என் அவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கலைஞர் த. வினோஜாவின் 'சுவாசிக்கும் நிலத்தின் வரையறைகள்' எனும் தொனிப்பொருளிலான காண்பியக் கண்காட்சி கிளிநொச்சி சோலைவனம் தனியார் விடுதியில் கடந்த 9 ஆம் திகதிமுதல் நடைபெற்றுவருகிறது. கண்காட்சியானது எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது. குறித்த கண்காட்சி தொடர்பாக கீழ்வரும் கட்டுரைகள் விவரிக்கின்றன.


# 'சுவாசிக்கும் நிலத்தின் வரையறைகள்'

## கட்புலக் கலைஞர் வினோஜாவின் கட்புலக் காட்சி - சில பகிர்வுகள்

நடாஷா கின்வாலா

*'போதுமான உணர்திறன் கொண்ட கருவிகளுடன், ஒரு புதரை வேரோடு பிடுங்குவதுகூட ஒரு நில அதிர்வு நிகழ்வாக மாறும். இந்த வாழ்க்கை என்பது அளவைப் புரிந்துகொள்வது பற்றியது' என்கிறார் கவே அக்பர்,*





த. வினோஜாவின் துணி இழைமம் மற்றும் தாபனக் கலை, பொதுசன வன்முறையுடன் தொடர்புடைய கதைகள் அவரது வாழ்க்கைச் சூழலை எவ்வாறு இடைமறிக்கின்றன என்பதை ஆராய்வதோடு, அவரது படைப்புகள் துடிப்பான வாழ்க்கைச் சூழல்களில் மனித மற்றும் புவியியல் கால அளவீடுகளை இணைக்கும் உணர்வுபூர்வமான களங்களாகவும் காணக்கிடைக்கின்றன. அவரது கலைப் படைப்புகள், போர்க்கால மற்றும் தொடர் இடப்பெயர்வுக்கு மத்தியிலான அன்றாட வாழ்க்கையில் நெக்ரோபோலிடிக்ஸ் நுழையும் வழிகளை ஆய்வுசெய்கின்றன. கலைஞரின் சொந்தப் பிராந்தியமான கிளிநொச்சியில் நடைபெறுகின்ற இந்தக்கண்காட்சி, "ஷார்ஜா பைனியல் 16க்காக" என்ற தலைப்பில் உருவாக்கிய சமீபத்திய திட்டத்தினையும், லாகூரில் உள்ள பீக்கன் ஹவுஸ் தேசியப் பல்கலைக்கழகத்தில் அவரது முதுகலைக் கண்காட்சியையும் ஒன்றிணைக்கிறது. வினோஜா, இலங்கையின் உள்நாட்டுப் போரின் பல தசாப்தங்களையும் அதன் தீர்க்கப்படாத பேறுகளின் பன்முக அம்சங்களையும் வெளிப்படுத்துவதோடு, இன மற்றும் மொழியியல் பிளவு, ஆயுதமயமாக்கப்பட்ட யதார்த்தங்கள் மற்றும் அரசின் மிருகத்தனம் ஆகியவை தலைமுறை இழப்பில் எவ்வாறு கூட்டிணைகின்றன என்பதை வெளிப்படுத்துகின்றன. அவரது குழந்தைப் பருவத்தைப்பற்றி கலைஞர் பதிவுசெய்கிறார். இதில் அவரது பாட்டியிடமிருந்து பிரிந்துசெல்வதும், தென்னிந்தியாவில் அகதியாகத் தஞ்சம் அடைவதற்காக கடல் வழியாகத் தப்பிச்செல்வதும் அடங்கும். ஊசியாலாக்கப்பட்ட வேலைப்பாடு, அக்ரிலிக் மற்றும் துணிகள் உள்ளிட்ட பொருட்களால் உருவாக்கப்பட்ட சிறிய அளவிலான அவரது படைப்புகள் தப்புவதற்கான வெளியேறுகைகள், கூடாரங்கள், முட்கம்பிகள், பதுங்கு குழிகள், கண்ணிவெடிகள் பற்றிய பயம், சோதனைச் சாவடிகள் மற்றும் பீரங்கித் தாக்குதல்களும் போன்றவற்றின் செறிவைப் பிரதிபலிக்கின்றன.

வடிவமைப்புகள், புள்ளிகள், கோடுகள் மற்றும் நில வரைபடங்களில் குறிப்பிடப்படுகின்ற நினைவகம், களப் பதிவுகள் மற்றும் தமிழ்ப் பெரியவர்கள், முன்னாள் அண்டை வீட்டார்கள், மனிதாபிமான ஈடுபாட்டாளர்கள் மற்றும் வடபகுதி மாற்றுத் திறனாளி இளைஞர்கள் ஆகியோருடனான நீடித்த உரையாடல்கள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டுள்ளன. குறிப்பாக, கட்டமைக்கப்பட்ட அழிவுகள், மௌனிப்புக்கான அழுத்தங்கள் மற்றும் வாக்குமூலங்களில் அரசியல் தணிக்கை இருந்தபோதிலும், செவிமடுத்தல் முறைமையை வலிமைதரும் நடைமுறையாக, த. வினோஜா கருதுகிறார். அதிகளவான பயத்தையும் வெறுப்பையும் விடவும் மிக அதிகமாகப் பிடித்துக்கொண்டுள்ள, உயிர்வாழும் உத்திகளின் கடுமையான வரையறைகளுக்குள் மென்மையை மீட்டெடுக்கும் கலைஞரின் ஹேப்டிக் முறைகள் மற்றும் கூட்டு அனுபவத்தின் பிரிகோலேஜ்க்கான அழைப்பை விடுக்கிறது. "இடப்பெயர்ச்சியின் நிலப்பரப்பில் தற்காலிக சமூகங்களை உருவாக்குவது" பற்றி அவர் பேசுகிறார், இது அறியாதவர்களிடையே பற்றாக்குறை வளங்களைப் பகிர்வதன்மூலம் உருவாகியுள்ள அதே நேரத்தில் ஆயிரக்கணக்கான பதுங்கு குழிகளுக்கு இடையில் பாதுகாத்தலாலும் பாதுகாக்கப்படுதலாலும் வடிவமைக்கப்படுகிறது. இலங்கை மற்றும் தென்னிந்திய நில வரையியலாளரால் பாரம்பரியமாக அரிசி மாவிலிருந்து தயாரிக்கப்படும் கோலத்தால் ஈர்க்கப்பட்ட வினோஜா, பகிரப்பட்ட சாட்சியத்தின் துறைகளாக மரபுரிமை பெற்ற மற்றும் புதுமையான அகராதியைக் கட்டியெழுப்புகிறார். இயற்கையான சாயங்களைப் பயன்படுத்துவது உள்ளிட்ட வண்ணத் தொனிகளின் தேர்வு சுண்டிக்குளக் கழப்பு மற்றும் வன்னியின் அடர்ந்த காடுகள் போன்ற பகுதிகளிலிருந்து கிடைக்கிறது. யதார்த்தமாகவும் உளவியல்ரீதியாகவும் தரைக்குக் கீழே நகர்ந்து, வினோஜா அடிக்கடி மோதல் மற்றும் பராமரிப்பால் வடிவமைக்கப்பட்ட ஒரு பலவீனமான அடைக்கல பதுங்கு குழிக்குத் திரும்புகிறார். பல படைப்புகளில் நிலக்கண்ணிவெடிகள், மக்கள் வசிக்கும் பிராந்தியங்களில் இராணுவமயமாக்கலின் நீடித்த முத்திரைகளாகவும் கொரில்லா போராட்டங்களின் மறைக்கப்பட்ட பண்புகள் மற்றும் பொறுப்புக்கூறலுக்கான கோரிக்கைகள் கேட்கப்படாத ஆயுதமேந்திய படுகொலைகள் பற்றிய ஒரு தோற்றமாகவும் நீடித்த எச்சரிக்கையாகவும் தோன்றுகிறது. அவரது நெசவு, கவிதை 1 மற்றும் 2 ஆகியவற்றில் சங்க காலத் தமிழ் இலக்கியத்திலிருந்து எடுக்கப்பட்ட மினியேச்சர் உரை வரைதல் என்பது அதன் இலக்கிய பரம்பரைக் கடத்துகையை ஆராய்வது மற்றும் போரினால் நிலைமாறிய நிலப்பரப்புகளின் சிக்கல்களை ஆராய்கின்ற அதேநேரத்தில் காதலின் காவியத்தனத்தையும் அதன் உறவுமுறையையும் நோக்கிச் செல்வது ஆகியவை முக்கிய கருப்பொருள்களாக அடங்கும். டிஜிட்டலின் துணையுடன் உருவாக்கப்படும் படங்களின் உச்ச பிரகாசத்தை கேள்விக்குள்ளாக்கி, வினோஜா மற்றொரு துணியாலான வரைபடத்தை உருவாக்குகிறார். பலஸ்தீன தாயகத்தை இடைவிடாமல் அழிப்பதன்மூலம் விடுதலைக் கனவுகளையும் பூர்விக அங்கீகாரத்தையும் தியாகத்துடனும் கண்ணியத்துடனும் உழைப்பதையும் தடுக்க முடியாது. டைம்ஸ் ஹாண்டட் பை பியர் அண்ட்ஹாரர். இனப்படுகொலை என்னும் வன்முறையின் தண்டனைக்கு எதிராக, அவரது படைப்புவாதம் இந்த பலவீனப்படுத்தும் அத்திவாரத்தில் மனிதாபிமான ஒற்றுமைக்காக மகத்தானதொரு தேடலில் உறவை உள்ளடக்கியதாகவுள்ளது.

துன்புறுத்தப்பட்ட இயக்கப் பாதைகள் வழியாகப் பிரிந்து செல்வதன் வரையறைகள் மற்றும் நீண்டகால இடப்பெயர்ச்சியிலிருந்து வெளிப்படும் வேரற்ற தன்மை ஆகியவை ஷாட்டர்டு ஹொறைஸன்ஸிலும் (202324) வெளிப்படுத்தப்படுகின்றன. த. வினோஜாவின் படைப்புகள் பத்திரிகையாளர், தடயவியல் அல்லது தன்னார்வத் தொண்டு நிறுவன பதிவுகளை நேர்த்தியாக வகைப்படுத்தியதைவிட மிகவும் சிக்கலான மற்றும் புலனுணர்வு நிறைந்த 'அனுமதிக்கப்படாத சான்றுகளின்' அகநிலை ஆவணமாக வெளிப்படுத்துகின்றன. சுழற்சி வடிவங்களில் ஓய்வெடுக்கத் திரும்பிய அவர், படைப்பு மீட்பின் எதிர்ப்புச் செயல்களுடன் காணாமல் போவதை எதிர்கொள்ள ஆற்றலைப் புதுப்பிக்கிறார்.

# படைப்புகள் கூறும் கதைகள்...

த. வினோஜா
காண்பியக் கலைஞர்,
கிளிநொச்சி

எனது துணிசார் கலை வெளிப்பாடானது சமூக முரண்பாடுகள் மற்றும் வன்முறை என்பன எவ்வாறு சுற்றுச் சூழலையும் அங்கு வாழ்ந்த மக்களையும் பாதிக்கின்றது என்பதை வெளிப்படுத்துகிறது. இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப்போரானது பல தசாப்தங்களாக தொடர்ந்த நிலையில், இப் போர்க்காலத்தில் ஏற்பட்ட தொடர்ச்சியான இடம்பெயர்தல் மற்றும் இழப்புகளின் சாட்சியாக நிலம் உள்ளது. நிலம், மக்கள், மற்றும் அவர்களின் நினைவுகள் எவ்வாறு பாதிப்புக்குள்ளாக்கப்பட்டது என்பதனை துணிகள் மற்றும் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் மீதான அணுகுமுறைகள் ஊடான சுய ஆவண வரைபடமாக எனது துணிசார் கலை வெளிப்பாட்டில் வெளிப்படுத்தியுள்ளேன். மேலும் இப் படைப்பாக்கங்கள் சங்ககால தமிழ் இலக்கியங்களில் வெளிப்படுத்தப்படும் போர் இடம்பெற்ற நிலத்தோற்றங்கள் எவ்வாறு எழுத்து வடிவில் விளக்கப்படுகின்றன என்பதிலும் தற்போதைய பாலஸ்தீன மக்களின் இன்னல்களாலும் ஈர்க்கப்பட்டன. குறிப்பாக சங்ககால தமிழ் இலக்கியத்தின் கவிதைகளை உசாவலாகக் கொண்டவை. இதன் பிரதான கருப்பொருளான புறத்திணை நூல்களில் போர் நிலக்காட்சி, அகத்திணை நூல்களில் காதல் சார்ந்த விடயங்களையும் குறிக்கின்றது. போரினால் உருமாறிய நிலத்தோற்றம் மற்றும் அன்புக்குரியவர்களின் இழப்பு போன்ற விடயங்களையும் விபரிக்கிறது. மனித சுற்றுச்சூழல் கோட்பாடுகள், மனிதன் எவ்வாறு இடங்களை உருவாக்குகிறான் என்பதை வெளிப்படையாக பேசுகின்றது.

வீடு என்பது நாம் வாழும் உணர்ச்சிபூர்வமானதும் நினைவுகளைப் பகிர்வதும் மூதாதையர்களின் நினைவுகளுடன் வேரூன்றியுள்ள இடமாகும். குறிப்பாக போர்க்காலத்தில் வீடு மற்றும் பதுங்குகுழி போன்றவற்றின் அத்தியாவசிய செயற்பாடு பற்றி உணரப்பட்டதுடன் இவற்றுடனான நினைவுகள் மற்றும் போரின் பல்வேறு வடுக்கள் என்பன எனது காண்பியப் படைப்பாக்கங்களால் காட்டப்படுகிறது. இனப்படுகொலை மற்றும் வன்முறையைக் கண்ட முல்லைத்தீவின் கரையாம், மற்றும் வெள்ளாம் முள்ளிவாய்க்காலின் இறுதி நாட்களையும் நினைவுகூறுகின்றது. இவை இறுதிப் பயணம், இறுதி அஞ்சலி, இறுதி சுவாசம், இறுதிச் சமர், இறுதிப் பட்டினி, மற்றும் இறுதித் தருணம் போன்றவற்று [illegible] மற்றும் பதுங்குகுழிகள் இரண்டும் ஆபத்து அடைக்கலம், அச்சம் பாதுகாப்பு போன்ற இருவேறு மனநிலை வெளிப்பாடுகளை கொண்டவை. இவற்றை தாங்கிய காடு சார்ந்த வன்னி நிலப்பரப்பானது ஒரு வரைபடமாகவும், அதனை ஒட்டிய வர்ணக்கையாள்கையும், படைப்பாக்கங்களில் வெளிப்படுத்தப்படுகின்றது. இவை கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் போன்ற குறிப்பிட்ட பகுதிகளில் மக்களின் மட்டுப்படுத்தப்பட்ட எல்லைகளையும் வெளிப்படுத்துகின்றன. போர் மற்றும் போருக்குப் பின்னரான சூழலில் மக்களின் மீள் எழும் தன்மை, பல சவால்களை புதுமையான தீர்வுகளாக மாற்றும் மக்களின் திறனைக் காண்பிக்கிறது. உயிர்வாழும் இந்தத் தருணம், ஆபத்தான சூழலினை தனிநபர்களாக எவ்வாறு சமாளிப்பது, வழிநடத்துதல், மற்றும் இழப்புகளை எதிர்கொள்வது அத்துடன் தங்கள் விடாமுயற்சியான செயற்பாட்டினால் அன்புக்குரியவர்களை எவ்வாறு பாதுகாக்கிறார்கள் என்பதனை பரிசீலனை செய்வதுடன் அவர்களின் நினைவுகளை காண்பியப்படுத்துகின்றது. மேலும் வன்முறையற்ற வாழ்வுக்கான குரலாக எனது கலை வெளிப்பாடுகள் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஹவத்தையில் விபத்து; 11 பேர் படுகாயம்

கஹவத்தை, கெதெதென்ன பகுதியில், இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தும் மரங்களை ஏற்றிச்சென்ற லொறியும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில், 11 பயணிகள் காயமடைந்து, கஹவத்தை ஆரம்ப மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த விபத்து நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது என கஹவத்தைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## தொழிலாளர்கள் தேவை

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் கீழ் குறிப்பிடப்பட்ட தொழிலாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் 20 - 55 வயதிற்குட்பட்டவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**1.தொழிலாளர் - (ஆண்** - தோட்டவேலை தொடர்பான அனுபவம் இருப்பின் முன்னுரிமை வழங்கப்படும்)

**2. சுத்திகரிப்பு தொழிலாளர் (பெண்)**

சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் இரு நற்சான்று பத்திரங்களையும் இணைத்து 20.08.2025 ஆந் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

அதிபர்,
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி,யாழ்ப்பாணம்.

# சுயாதீன விசாரணை நடப்பதற்கு அருண ஜயசேகரவை நீக்குங்கள்!

*அஜித் பி பெரேரா எம்.பி. வலியுறுத்து*

பிரதிப்பாதுகாப்பு அமைச் சர் அருண ஜயசேகரவை தற்காலிகமாகவேனும் பதவிநீக்கம் செய்து உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான சுயாதீன விசாரணைக்கு இடமளிக்கவேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்கு இருக்கிறது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் இடம்பெற்ற காலத்தில் கிழக்கு மாகாண இராணுவக் கட்டளைத் தளபதியாக இருந்த அருண ஜயசேகர, தற்போது இந்த அரசாங்கத்தின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருக்கிறார். இவர் இந்தத் தாக்குதல் தொடர்பில் பிரதான சாட்சியாளர்.

அப்படியான ஒருவரைப் பொறுப்புவாய்ந்த பதவியில் வைத்துக்கொண்டு, மேற்கொள்ளப்படும் விசாரணையில் சுயாதீனத்தன்மையை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

அருண ஜயசேகரவை பிரதிப் பாதுகாப்பு அமைச்சு பதவியில் இருந்து விலக்கி உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளின் சுயாதீனத்தை ஜனாதிபதி பாதுகாப்பார் என நாங்கள் நம்புகிறோம். இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் பலதடவைகள் குறிப்பிட்டும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்காததாலேயே நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரத் தீர்மானித்தோம் - என்றார். (எ-இ)

## விதை நெல் விற்பனைக்கு

இயந்திரம் மூலம் சுத்திகரிக்கப்பட்டு முளைத்திறன் பரிசீலிக்கப்பட்ட அதிகூடிய விளைச்சலைக் கொண்ட BG 34.6 விதை நெல் விற்பனைக்கு உண்டு.

077 659 2044

(CR/45792) 1-1

## தோட்ட வேலையாள் தேவை

தங்கியிருந்து தோட்ட வேலை செய்வதற்கு 45 - 50 வயதிற்குட்பட்ட வேலையாள் தேவை. சம்பளம் மாதம் ஒன்றிற்கு 50000/-

தொடர்புகளுக்கு:

077 977 3286

(CR/45783) 1-1

## மரண அறிவித்தல்

பிறப்பு

12 . 07 . 1943



இறப்பு

12 . 08 . 2025

### திருஞானம் தவமணி

புனித அந்தோனியார் வீதி, சுன்னாகத்தைப் வசிப்பிடமாக கொண்ட திருமதி திருஞானம் தவமணி அவர்கள் நேற்று (12.08.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வடிவேலு தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், திரு.திருமதி யோசப் யுவக்கீன் தம்பதியின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற ஜோசப் திருஞானம் (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், திரு.தி.ஞானசீலன் (முகாமையாளர் யுனைட்டர் பியூவால் மாட் கிளிநொச்சி), திரு.தி.டார்வின் ஜெயசீலன் (ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி), திருமதி.டொ.ஞானறோஜினி (ஆசிரியர்-ஏழாலை சிறீமுருகன் வித்தியாலயம்), திருமதி.அ.றெகன்சியா ஞானவதனி (ஆசிரியர்-ஏழாலை மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திருமதி.ஞா.மொறின் (ஆசிரியர், குளமங்கால் றோ.க.த.க.பாடசாலை), திருமதி.டா.மரிய கொன்சலீனா, திரு.ம.டொமினிக் ஜீவா (ஆசிரியர் சரவகச்சேரி இந்துக்கல்லூரி), திரு.வி.அலெக்ஸ் பெனடிக்ற் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஞா.யூக்கிரேசியா (மாணவி, பல்கலைக்கழகம் சப்புரகமுவ - விவசாயபீடம்), கிறிஸ்ரியன் ஒஸ்ரேட் (SLIIT Northern Uni), ஞா. கிங் றொசாரியன் (குருமட மாணவன் Salvatorian), டா.ஜலின் (மாணவி உடுவில் மகளிர் கல்லூரி), அ. லிடியா (மாணவி உடுவில் மகளிர் கல்லூரி), டா.டானியலா (மாணவி, உடுவில் மகளிர் கல்லூரி), டொ. யவ்னியா (மாணவி உடுவில் மகளிர் கல்லூரி), ஞா.பிறின்ஸ் றொசாரியன் (மாணவன் புனித பத்திரிசியார் கல்லூரி), அ.தொம்சன் (மாணவன் பரியோவான் கல்லூரி), டா. டெவின்பஸ்கால் (மாணவன் மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திரு.வ.மகேந்திரராசா, திருமதி.இ.சரோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற திருமதி.ம.இராசதேவி, திரு.ச. இராமச்சந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் இன்று (13.08.2025) புதன்கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு நடைபெற்று சுன்னாகம் புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**

**திரு.திருமதி.ஞானசீலன் - 077 112 9279**
**திரு.திருமதி டார்வின் ஜெயசீலன் - 077 617 4145**
**திரு.திருமதி டொமினிக் ஜீவா - 074 057 6048**
**திரு.திருமதி அலெக்ஸ் பெனடிக்ற் - 077 067 3753**

## மரண அறிவித்தல்



### திருமதி மேரி பிலோமினா ஜெகராஜா

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், கொழும்பு பம்பலப்பிட்டியவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி பிலோமினா ஜெகராஜா கடந்த 11.08.2025 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோசவ் அன்ரன் ஜெயராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான S.A.யோசவ் - மரியம்மா தம்பதியரின் அன்பு புதல்வியும், காலஞ்சென்றவர்களான யோசவ்பொன்னையா - முத்தம்மா தம்பதியரின் மருமகளும், டொளி, எமில், நெவில், மெறில் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற அச்சிலிஸ் மற்றும் லியப்போல், பேணடெற், (பேபி) கலிஸ்ரஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஜெயரட்ணம் ஜெயக்குமார் மற்றும் அலோமா, ஊனா, சேபால ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜிற், ஜெகான், யோசுவா, அடம், பெண், றொசெயில், ஆடியா, அலன்கா ஆகியோரின் பேர்த்தியும், எய்டன், கைசன், ஒலிவியா, கோப், கிங்ஸ்லி, றிசி, ஸ்காலற், அலிஸ், காடன் ஆகியோரின் பூட்டியும், காலஞ்சென்றவர்களான அருட்தந்தை செல்வராஜா, மேரி அக்கினஸ், சிங்கராயர், ராணி மற்றும் நவம், அருட்சகோதரி ஜெரோம், பேபி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைத் திருப்பலி எதிர்வரும் 18.08.2025 திங்கட்கிழமை பம்பலப்பிட்டி கிளிவெற் பிளேஸ் தேவாலயத்தில் காலை 8.30 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும், அன்னாரின் திருவுடல் ஜெயரட்ணம் மலர்ச்சாலையில் 18.08.2025 முற்பகல் 10.30 - 3.30 வரை பார்வைக்காக வைக்கப்பட்டு கனத்தையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,**
**சகோதரர்கள்.**
**மகன்: 076 247 6640, 077 747 2095**

**தகவல்:**
**ஜோசப் கலிஸ்ரஸ்**
**72, றக்கா வீதி.**

(CS 59096) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்பார்ப்புக்கு...

செம்மணி மனிதப் புதைகுழி மீதான இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன. இதுவரை 147 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு, அவற்றில் 133 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்ட நிலையில், இரண்டாம்கட்ட அகழ்வுப்பணிகளின் இரண்டாம்கட்ட நடவடிக்கைகள் முடிவுக்கு வந்திருந்தன. இரண்டாம்கட்ட அகழ்வுப்பணிகளின் மூன்றாம் கட்ட நடவடிக்கைகள் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறான நிலையில், செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கு நாளை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்காக எடுக்கப்படவுள்ளது. செம்மணிப் புதைகுழியின் மண்மாதிரிகள் உள்ளிட்ட பல்வேறு அறிக்கைகள் நீதிமன்றத்தால் கோரப்பட்ட நிலையில், நாளைய வழக்கு பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த அகழ்வுப்பணிகளின்போது, தரையை ஊடுருவும் ராடர் அமைப்பின் மூலம் ஸ்கான் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அது தொடர்பான அறிக்கையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது. அந்த அறிக்கையும் சிலவேளைகளில் நாளை சமர்ப்பிக்கப்பட வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகின்றது. (அ-ம-26)

## அரச...

தெரிவித்துள்ளார். கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில், தேசிய இளைஞர் மாநாடு நேற்று நடைபெற்றது. இந்த மாநாட்டில் ஜனாதிபதி அநுர கலந்துகொண்டு தெரிவித்ததாவது:-

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் இளைஞர்களின் பங்குபற்றல் மிகவும் முக்கியமானதாகும். அவர்களால்தான் சிறந்ததொரு நாட்டை கட்டியெழுப்பமுடியும். அரசியல் அதிகார வர்க்கத்தினரின் கைகளில் இருந்த இளைஞர் மன்றங்கள் இன்று நாட்டை நேசிக்கும் இளைஞர்களின் கைளுக்குக் கிடைத்துள்ளன. தேசியப் பொருளாதாரத்தில் மிகப்பெரிய பங்கை இளைஞர்கள் கைப்பற்ற வேண்டும். இந்தக் கதிரையில் நாம் நிரந்தரமாக அமர்ந்திருக்கப் போவதில்லை. கதிரையில் அமர்ந்தபோதே அதிலிருந்து செல்லும் நாள் குறித்தும் எண்ணியுள்ளோம். ஆனால், இந்த அதிகாரம் மீண்டும் யாரிடம் செல்லவேண்டும் என்பதையும் எண்ணியுள்ளோம். எதிர்கால இளைய தலைமுறையினர் வசமே அதிகாரம் செல்லவேண்டும். அதற்கான பணியையே நாம் ஆற்றிவருகிறோம்.

அரச துறையில் பல்வேறு வெற்றிடங்கள் உள்ளன. அரச சேவையில் அதிகளவானவர்கள் உள்ளபோதிலும், துறைசார் நிபுணத்துவம் உள்ளவர்கள் குறைவாக உள்ளனர். அவ்வாறான வெற்றிடங்களை நிரப்ப உள்ளோம். குறிப்பாக 62 ஆயிரம் பேருக்கு அரச சேவையில் வெற்றிடம் உள்ளது. குறித்த வெற்றிடங்களை நிரப்பத் தீர்மானித்துள்ளோம் - என்றார். (அ-ம-44)

## பிரபல...

அமைப்பினர் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சியில் உள்ள பிரபல மகளிர் பாடசாலையொன்றின் அதிபர் பதவிக்குப் பொருத்தமான நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் அண்மையில் கோரப்பட்டிருந்தன. இந்த நியமனங்களுக்காக யாழ்ப்பாணத்தில் இருந்து ஒருவரும், கிளிநொச்சியில் இருந்து ஆறு பேருமாக ஒட்டுமொத்தமாக 7 பேர் விண்ணப்பித்திருந்தனர். ஆனால், தகுதிநிலை உள்ளிட்ட பல்வேறு காரணங்களைக் குறிப்பிட்டு, அவர்களுக்கான வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. அதேநேரம், அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்காத அருட்சகோதரியொருவருக்கு நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டு, புள்ளிகள் வழங்கப்பட்டு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. பதவிநிலைக்கு விண்ணப்பிக்காத அருட்சகோதரி எவ்வாறு நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டார்? எந்த அடிப்படையில் அவருக்கு நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டு புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன? என்பதில் எமக்குப் பெரும் சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளன.

இதைவிட குறித்த பாடசாலைக்கு தரநிலை ஒன்றில் உள்ள அதிபரே நியமிக்கப்படலாம். தரநிலை ஒன்றில் உள்ளவர்கள் எவரும் விண்ணப்பிக்காத பட்சத்தில் தரநிலை இரண்டில் உள்ளவர்கள் நியமிக்கப்படலாம். ஆனால், இவை இரண்டிலும் இல்லாமல், தரநிலை மூன்றில் உள்ளவரே தற்போது நியமிக்கப்பட்டுள்ளார். எனவே, இந்த நியமனம் பக்கச்சார்பானது மற்றும் தவறானது என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

இந்தப் பொருத்தமற்ற நியமனத்துக்காக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் விசாரிக்கப்படவேண்டும் - என்றனர். (அ-ம)

## அருண...

சியான ஐக்கிய மக்கள் சக்தியால் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட 32 எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பமிட்டுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், ராதாகிருஷ்ணன், அர்ச்சுனா ஆகிய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களும் அடங்குகின்றன.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடந்த போது அருண ஜயசேகர, கிழக்கு மாகாணக் கட்டளைத் தளபதியாகச் செயற்பட்டார். ஆதலால், விசாரணைகள் சுதந்திரமாக இடம்பெறவேண்டுமானால் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் பதவிவிலக வேண்டும் என எதிரணிகள் வலியுறுத்தி வந்தன. எனினும், அவர் பதவி விலகவில்லை. இதையடுத்தே அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## ஹர்த்தால்...

உயிரிழந்ததாக் கூறப்படும் இளைஞரின் இறப்புக்கு நீதிகோரியும் ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி ஹர்த்தாலை நடத்துவதற்கு தமிழரசுக் கட்சி அழைப்பு விடுத்திருந்தது.

எனினும், ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதியன்று மன்னார் மடுத் திருத்தலப் பெருவிழா நடைபெறவுள்ளது. இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் இருந்தும் லட்சக்கணக்கான மக்கள் வருகை தரும் திருவிழா நாளில் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள முடிவுக்கு பல தரப்பினரும் தமது எதிர்ப்பை வெளியிட்டனர். குறிப்பாக, ஹர்த்தாலை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று மன்னார் மறைமாவட்டம் வெளிப்படையாக அறிவித்தது.

அத்துடன், நல்லூர் உற்சவத்தைக் காரணமாகக் குறிப்பிட்டும், ஹர்த்தாலை பிறிதொரு தினத்துக்கு மாற்றுவதே பொருத்தமானதாக இருக்கும் என்று வலியுறுத்தப்பட்டது. இவ்வாறான பின்னணியிலேயே, ஹர்த்தால் ஓகஸ்ட் மாதம் 18ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது. (அ-ம)

## தொண்டைமானாறில்...

மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட மீனவர்கள் சடலமொன்று மிதப்பதை அவதானித்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். இதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த அச்சுவேலிப் பொலிஸார் சடலத்தை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர்.

மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. (அ-ம-20-26-23)

## பிரதமர்...

ளார் என வெளியாகும் தகவல்களை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிராகரித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது. இதன்போது, பிரதமர் பதவி தொடர்பில் ஊடகவியலாளர் மாநாட்டை நடத்திய அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ விடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதன்போது அவர் தெரிவித்ததாவது:-

பிரதமர் பதவியில் மாற்றம் செய்வதற்கு ரிய எந்தவொரு தேவைப்பாடும் அரசாங்கத்துக்குக் கிடையாது. நாம் கூட்டுப் பொறுப்புடன் செயற்பட்டுவருகின்றோம். சமூக ஊடகங்களில் கட்டுக்கதைகளை பரப்பிவிட்டு அது தொடர்பில் கேள்வி கேட்பதில் இருக்கும் நியாயம் என்ன? அரசாங்கத்துக்குள் எவ்வித மோதலும் கிடையாது. நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவோம். அரசியல் கலாசாரத்தை மாற்றுவோம். அதை நோக்கியே எமது பயணம் தொடரும் - என்றார். (அ-ம-44)

## நிலத்துக்குக்...

வெட்டி, அதற்குள் கஞ்சாப்பொதிகள் பதுக்கப்பட்டுள்ளன என்று மன்னார்ப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது. அந்தத் தகவலுக்கு அமைய, மன்னாரில் இருந்து வந்த சிறப்புப் பொலிஸ் குழுவினர் மேற்படி கஞ்சா பொதிகளைக் கைப்பற்றினார்கள்.

அந்த கஞ்சாப்பொதிகள் இந்தியாவில் இருந்து படகுமூலம் இலங்கைக்குக் கடத்திவரப்பட்டுள்ளன என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26)

## செப்ரெம்பர்...

தென்மராட்சி - மட்டுவில் பகுதியில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலையம் செப்ரெம்பர் மாதம் இறுதிக்குள் செயற்பட ஆரம்பிக்கும் என்று வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

மட்டுவில் பொருளாதார மத்திய நிலையத்தை அமைச்சர் நேற்றுப் பார்வையிட்டார். இதன் பின்னர் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே, செப்ரெம்பர் மாத இறுதிக்குள் குறித்த பொருளாதார மத்திய நிலையம் செயற்படும் என அறிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் ம.பிரதீபன், யாழ். மாநகரசபை ஆணையாளர், அமைச்சின் அதிகாரிகள், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (அ-ம-20-26)

## விபத்தில்...

ளார். எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதியைச் சேர்ந்த செல்வகுணசிங்கம் பேரின்பநாயகி (வயது-55) என்பவரே உயிரிழந்தவராவார்.

திருகோணமலையிலிருந்து யாழ். நகர் நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து எழுதுமட்டுவாழ் பகுதியில் உள் வீதியிலிருந்து ஏ-9 பிரதான வீதிக்கு ஏறமுற்பட்ட மோட்டார்சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்துச் சம்பவித்துள்ளது.

மோட்டார்சைக்கிளில் பயணித்த பெண் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர் அவர் அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையிலேயே சிகிச்சையின் போது உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-28-9-66-159-20-23)

## இருட்டடிப்புச்...

காப்பு பிரதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வெளிப்படுத்துகின்றது - இவ்வாறு அரசாங்கம் அறிவித்துள்ளது.

பாதுகாப்புப் பிரதி அமைச்சருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்ததாவது:-

உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் முறையாக இடம்பெற்றுவரும் விசாரணையை மூடிமறைக்கும் நோக்கில் எதிரணிகளால் பெரும் சதித்திட்டம் தீட்டப்படுகின்றது. இந்தச் சதிகளில் அரசாங்கம் சிக்காது.

உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளை முறையாக இடம்பெறாதவேளை, இவரின் பெயர் (பிரதி பாதுகாப்பு அமைச்சர்) சஜித் தரப்புக்கு நினைவுக்கு வரவில்லை. நாடாளுமன்றத் தெரிவுக்குழு மற்றும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு என்பவற்றில் கூட இவரின் பெயரைக் குறிப்பிடவில்லை. தற்போது அவரின் பெயர் திடீரென நினைவுக்கு வந்தமை ஏன்?

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத்திணைக்களத்தினர் உரிய வகையில் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். இந்த நிலையில் அரசாங்கத்துடன் தொடர்புபட்ட ஒருவரை இதனுடன் சஜித் தரப்பு தொடர்புபடுத்த முற்படுவது ஏன்? உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி மற்றும் உண்மையான குற்றவாளிகளை மூடிமறைக்கும் தேவைப்பாடு எதிரணிக்கு இருப்பது இதன்மூலம் தெரிகின்றது - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறவிடப்பட்டது

ஸ்டான்லி வீதிக்கும் ஆரியகுளம் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் BMW கார் திறப்பு (Key) தவறிவிடப்பட்டுள்ளது.
கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**077 959 2628**

## வீட்டு உதவியாளர் தேவை

முதியவருக்கு துணையாக 40 - 65 வயது ஆண், வீட்டில் தங்கி இருக்க வேண்டும். அல்லது இரவில் மட்டும் தங்க வேண்டும். சமைக்க தேவை இல்லை.

தொடர்பு:- **+91 78451 31398**

## ஆலயப் பூசகர் தேவை

அராலியில் அமைந்துள்ள தனியார் ஆலயத்திற்குப் பூசகர் தேவை.
தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு: **077 331 1137**

(CS 59101) J-1

## காணி தேவை

யாழ்ப்பாணம் கோப்பாய் பிரதேச சபை எல்லைக்குள் வடமராட்ச்சி பகுதிகளில் 10 பரப்புக்கு மேலாக உள்ள காணிகள் தேவை. குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி விரும்பத்தக்கது. தரகர் தேவையில்லை காணி உரிமையாளர் தொடர்பு கொள்ளவும்.

**076 987 8617,076 860 2770**

## காணி விற்பனைக்கு உண்டு

திருநெல்வேலியில் நல்லூர் கோயிலுக்கு 1.2Km தூரத்திலும், பலாலி வீதியில் இருந்து 500m தூரத்திலும் 22 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

Whatsapp: **076 091 8505**

## காணி விற்பனைக்கு

நல்லூர் குறுக்கு வீதியில் 6 3/4 பரப்பு காணி விற்பனைக்கு.
(தரகர் தேவையில்லை)
தொடர்புகளுக்கு

**076 466 6148, 077 364 0941**

(CS/59702) J-1

## வேலையாள் தேவை

யாழ்.நகரில் உள்ள குளிர்பான நிலையம் ஒன்றிற்கு ஆண் வேலையாள் தேவை.
வயதெல்லை 18-35
தொடர்புகளுக்கு:

**077 306 3733**



புன்னாலைக் கட்டுவன் வடக்கு ஸ்ரீ துர்க்கா முன்பள்ளியில் சிறுவர்களுக்கான கதை கூறல் நிகழ்வு ஸ்ரீதுர்க்கா சன சமூக நிலைய தலைவர் இ. கெங்காதரன் தலைமையில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. வளவாளராக ஊரெழு கணேச வித்தியா சாலை அதிபர் இரா.ஜெயக்கு மார் பங்குபற்றினார். (ச-25)

# பிரதமர் ஹரிணிக்கு சுதந்திரக்கட்சி ஆதரவு

கொழும்பு, ஓக.13

தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் பிரதமர் பதவியில் மாற்றம் வரக்கூடாது. அந்தப் பதவியில் கலாநிதி ஹரிணி அமரசூரியவே தொடர வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினரான முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

"சுப்ரிம் செட்" ரொக்கெட் விவகாரத்தால் ஆளுங்கட்சிக்குள் மோதல் வெடித்துள்ளது. இந்தநிலையில் பிரதமர் பதவிக்கு அமைச்சர் பிமல் ரத்நாயக்க நியமிக்கப்படவுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

பிமலா அல்லது ஹரிணியா உங்கள் தேர்வு என்ன? என்று ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:-

உலகில் முதல் பெண் பிரதமரை உருவாக்கிய கட்சிதான் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி. எனவே பெண்ணொருவர் பிரதமர் பதவியில் இருப்பதையே நாம் விரும்பு கின்றோம். ஹரிணி அமரசூரிய மாற்றுச் சிந்தனை உடையவர். உலக மாற்றத்துக் கேற்பபயணிக்கக்கூடியதிறமையானபெண் பிரதமர் பதவியில் அவர் நீடிப்பதையே விரும்புகின்றோம்- என்றார். (எ-44)



# நல்லூர் ஆலயச் சூழலில் நாய்களால் தொல்லை!

யாழ்ப்பாணம், ஓக.13

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழா தற்போது இடம்பெற்று வரும் நிலையில் ஆலயச் சூழலில் அங்கப்பிரதிஷ்டை செய்பவர்கள் ஆலயச் சூழலில் நடமாடுகின்ற நாய்களாலும் அவற்றின் மலக்கழிவுகளாலும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர் என்று அடியவர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இதுதொடர்பில் தமது கடும் அதிருப்தியை ஆலயச் சூழலில் அமைக்கப்பட்டுள்ள யாழ்.மாநகரசபையின் உற்சவகாலப் பணிமனைக்குச் சென்று முறையிட்டுள்ளனர்.

இதையடுத்து யாழ்.மாநகரசபையின் உற்சவகாலப் பணியாளர்கள் தங்குமிடத்துக்குச் சென்று பணியாளர்களை அழைத்துவந்து அங்கப் பிரதிஷ்டை செய்யும் மணல் மீது காணப்பட்ட நாய்களின் எச்சங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அத்துடன் பெருந்திருவிழாவையொட்டிக் கடமையாற்றுகின்ற சாரணச் சிறார்களும் ஆலயச் சூழலில் காணப்பட்ட நாய்களை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. (ச-66)

# இன்று முதல் 16ஆம் திகதி வரை வடமாகாணத்தில் பரவலாக மழை!

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இன்றுமுதல் எதிர்வரும் 16ஆம் திகதிவரை மழை தொடரும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல் துறையின் தலைவரும், வானிலை ஆய்வாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வங்காள விரிகுடாவில் வளிமண்டல மேலடுக்குச் சுழற்சி ஒன்று உருவாகியுள்ளது. இது மேற்கு, வடமேற்குத் திசை நோக்கி நகர்ந்து நாளை வியாழக்கிழமை இந்தியாவின் ஆந்திர மாநிலக் கடற்கரையோரமாக நிலை கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக இன்று புதன்கிழமை முதல் எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில பகுதிகளுக்கு மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது - என்றார். (ம-66)

# பருத்தித்துறையில் நாளை நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஓக.13

வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்குப் பிரதேசங்களை உள்ளடக்கியதாக மேற்கொள்ளப்படும் ஒரு நாள் நடமாடும் சேவை பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

பருத்தித்துறை, கரவெட்டி மற்றும் மருதங்கேணி ஆகிய மூன்று பிரதேச செயலாளர்கள் பிரிவுகளை உள்ளடக்கியதாக காலை 8.30 மணிமுதல் பி.ப. 4.30 மணிவரை இந்த சேவை நடைபெறவுள்ளது.

இதன்போது, ஆட்பதிவுச் சேவை, பிறப்பு, இறப்புச் சான்றிதழ் வழங்கும் சேவைகள், ஓய்வூதியச் சேவைகள், வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சேவைகள், மோட்டார் வாகனப் பதிவுகள், கம்பனிப் பதிவுகள், சுகாதார சேவைகள், கண் பரிசோதனை மற்றும் மருத்துவ சேவைகள், ஏற்றுமதிக்கான வாய்ப்புகள், வட மாகாணத்தின் சகல அமைச்சுக்குரிய சேவைகள், பிரதேச செயலகம் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய சேவைகள் உள்ளிட்ட சேவைகள் நடைபெறவுள்ளன. (ச-25,100)

# ஆன்மிக அருளுரை

யாழ்ப்பாணம், ஓக.13

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தில் சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டு வரும் ஆன்மிக அருளுரை இன்று புதன்கிழமை பதினாறாவது நாளாக நடைபெறவுள்ளது. நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீன மண்டபத்தில் இன்று இரவு 8 மணி முதல் 8.30 மணி வரை நடைபெறவுள்ள நிகழ்வில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு.வேலன் சுவாமிகள் கலந்துகொண்டு 'வாழ்வாய் இனி நீ' எனும் தலைப்பில் ஆன்மிக அருளுரை ஆற்றுவார். (ச-25,66)

# இலவசக் காணிப்பத்திரம் கையளிப்பு நிகழ்வு இன்று

வடக்கு மாகாணத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டு 53 வருடங்களின் பின் முதல்முறையாக இலவசக் காணிப்பத்திரம் வழங்கும் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று புதன்கிழமை பளை மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது என ஆணைக்குழுவின் பணிப்பாளர் தி.விமலன் தெரிவித்துள்ளார். (ச-25)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.